பக்கங்கள்: 12 | விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | பங்குனி 07 | வியாழக்கிழமை 21.03.2019 | கதிர் 137

**இனி இது ரகசியம் அல்ல!**

ஜெனீவாவில் இலங்கை விவகாரம் கையாளப்படும் இச்சமயத்தில் அதனை ஒட்டிய ஒரு விடயத்தை இப்பத்தியில் இன்று சுட்டிக்காட்டுவது பொருத்தமானது என நினைக்கிறேன்.

இந்த நாட்டில் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக பக்கம் 02 >>>

# கலப்பு நீதிப் பொறிமுறைக்கு ஒருபோதுமே இடமளியோம்!

## ஐ.நா. ஆணையரின் கோரிக்கையை அடியோடு நிராகரித்தது இலங்கை!




ஜெனீவா, மார்ச் 21

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்குச் சர்வதேச நீதிபதிகளையும் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை ஏற்கமுடியாது என்று வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஜெனீவாவில் தெரிவித்தார். பக்கம் 11 >>>

## மனித உரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது அவசியம்

### இலங்கையிடம் டென்மார்க் வலியுறுத்தல்

ஜெனீவா, மார்ச் 21

மனித உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் வன்முறைகளுக்கு எதிராக இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என டென்மார்க் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40ஆவது கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் இலங்கை தொடர்பாக நேற்றுத் தமது பக்கம் 11 >>>

## குற்றமிழைத்தோரை விடுவிப்பதால் சிறுபான்மையினருக்குப் பேராபத்து

### மனித உரிமை ஆணையர் இலங்கைக்கு எச்சரிக்கை

ஜெனீவா, மார்ச் 21

தண்டனை விடுவிப்பு நிலை இலங்கையில் நீடிப்பதால் எதிர்காலத்தில் சிறுபான்மை மக்களுக்கு அது பாதகமாக அமையும் என்று ஐ.நா.மனித உரிமைகள் ஆணை பக்கம் 11 >>>

## ஐரோப்பிய ஒன்றியம் அதிருப்தி

ஜெனீவா, மார்ச் 21

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படாமல் உள்ளமை குறித்து பக்கம் 11 >>>

## கனடா கடும் அழுத்தம்

கொழும்பு, மார்ச் 21

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய உரிய கால எல்லைக்குள் தீர்மானம் முழுமையாக நிறைவேற்றப்பட பக்கம் 11 >>>

# பொறுப்புக்கூறலில் இலங்கை மந்த கதி!

## ஐ.நா. மனித உரிமை ஆணையர் ஜெனீவாவில் நேற்றுக் காட்டம்




ஜெனீவா, மார்ச் 21

பொறுப்புக்கூறல் பொறிமுறையைச் செயற்படுத்துவதில் இலங்கை மந்தகதியில் செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட், வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினார். பக்கம் 11 >>>

## 6 தமிழ்க் கட்சிகளின் மனு ஜெனீவாவில் கையளிப்பு!

ஜெனீவா, மார்ச் 21

இலங்கை விவகாரத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல பக்கம் 11 >>>

## 13 ஆவது திருத்தச் சட்டத்தை செயற்படுத்த வேண்டும் அரசு

### ஜெனீவாவில் இந்தியா வலியுறுத்து

ஜெனீவா, மார்ச் 21

இலங்கைத் தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் பக்கம் 11 >>>

## போர்க்குற்ற விசாரணையை அரசே தொடங்கவேண்டும்!

### வலியுறுத்துகிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, மார்ச் 21

இலங்கையில் யுத்த காலத்தில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பாக சர்வதேசத்தின் விசாரணைகளில் இருந்து வெளியேற வேண்டுமானால் குற்றவாளிகள் பக்கம் 11 >>>

## மைத்திரிபாலவுக்கு சிங்கப்பூர் பதிலடி!

கொழும்பு, மார்ச் 21

இலங்கை மத்திய வங்கி பிணை மோசடியில் குற்றஞ்சாட்டப்பட்டு சிங்கப்பூரில் தங்கியுள்ளார் எனக் கூறப்படும் அர் பக்கம் 11 >>>

## வாடகைக் கார் சாரதி மீது யாழ்.நகரில் வாள்வெட்டு!

### நேற்றுப் பட்டப்பகலில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். நகரில் கார், மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல் ஒன்று வீதியால் பயணித்துக் கொண்டிருந்த வாடகை சேவையில் ஈடுபடும் காரை பக்கம் 11 >>>

## 'ஜனாதிபதி வேட்பாளரே!' கோட்டாவை விளித்த நவீன்!

கொழும்பு, மார்ச் 21

எதிர்கால ஜனாதிபதி வேட்பாளரே என விளித்துக் கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று பக்கம் 11 >>>

**ஆறுதலின் கற்றல் ஊக்கிகள்**

எமது நிறுவனத்தினால் வெளியிடப்படும் தரம் 3 தொடக்கம் 11 வரையான கற்றல் ஊக்கிகள் இவ்வருடம் 2 ஆம் தவணைக்கு வடமாகாண பாடசாலைகளுக்கு பாடசாலை ரீதியாக விநியோகிக்கப்படமாட்டா.

ஆனால் விரும்புவோருக்கு வழங்கப்படும்.

விரும்புவோர் பின்வரும் முகவரியுடன் எழுத்து மூலம் 05.04.2019 திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆறுதல்,
இல.51 வைமன் வீதி. யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 7092
மின்னஞ்சல் – aaruthaltrinco@gmail.com

சுந்தரம் டிவகலாலா
பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர், ஆறுதல்.

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

காலைக்கதிர் Kalaikathir



# 300 தமிழ்க் கிராமங்கள் கிழக்கில் அபகரிப்பு!

## விக்கி பகிரங்கக் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, மார்ச் 21

இரு வேறு சமூகங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் கிழக்கு தமிழ் மக்களின் நிலைமை பாரதூரமான நிலையில் இருக்கின்றது. எமது மக்கள் 300க்கும் அதிகமான தமது பூர்வீகக் கிராமங்களை முற்றாக இழந்துவிட்டார்கள். தொடர்ந்தும் அவர்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கம், அரசியல் ஒற்றுமை என்பவற்றைக் காரணம் காட்டி எமது அரசியல் தலைமைகள் இந்தப் பிரச்சினைகளைத் தட்டிக் கழித்து வருகின்றன என்று மக்கள் என்னிடம் குறை கூறினார்கள்.



- இவ்வாறு தெரிவித்தார் வடக்கு முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வீ.விக்னேஸ்வரன்.

நேற்று முன் தினம் மட்டக்களப்பில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் அழைப்பில் பேரெழுச்சியாக பேரணி இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட விக்னேஸ்வரன், பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிழக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு எமது மக்கள் மேற்கொண்டிருக்கும் இந்தப் போராட்டமானது மிகவும் முக்கியமானது. புதிய பரிமாணமும் உத்வேகமும் கூர்மையும் அடைந்து வரும் தமிழ் மக்களின் உரிமைக்கும் நீதிக்குமான அரசியல் போராட்டத்தில் காத்திரமான பங்களிப்பை வழங்கும் வகையில் இந்தப் போராட்டம் அமைந்திருக்கின்றது.

இந்தப் போராட்டத்தினூடாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்துக்கும் இலங்கை அரசுக்கும் வெளிப்படுத்தி இருக்கின்ற செய்தி தீவிர கவனத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலே 2019 ஆண்டுக்கான முதலாவது கூட்டத்தொடர் நடைபெற்றுவரும் இந்த வேளையில் எமது மக்கள் பல்வேறு ஏமாற்றுக்கள், ஏமாற்றங்கள், சூழ்ச்சிகள், அடக்குமுறைகள், உதாசீனங்கள், அவமானங்கள் ஆகியவற்றின் மத்தியிலும் ஓர்மத்துடன் வடக்கு கிழக்கில் மேற்கொண்டுவரும் தொடர்ச்சியான இந்தப் போராட்டங்களையும் அவர்களின் கோரிக்கைகளையும் ஐ.நா., சர்வதேச நாடுகள் மற்றும் இலங்கை அரசு ஆகியவை அலட்சியம் செய்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கின்றேன்.

படித்த மக்கள் முதல் பாமர மக்கள் வரை எல்லோரும் ஒன்றாக இணைந்து தாமாகவே இந்தப் போராட்டங்களை எந்த அரசியல் கட்சிகளினதும் பின்னணி எதுவும் இன்றி மேற்கொண்டுவருவதன் தாற்பரியத்தை அலட்சியம் செய்யாமல் அதனைக் கவனத்தில் எடுத்து ஆவன செய்யவேண்டும்.

2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கை அரசின் அனுசரணையுடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தினை இலங்கை அரசு நிறைவேற்றப் போகும் நேர்மை மற்றும் பற்றுறுதி ஆகியவை குறித்து எமது மக்களுக்கு அன்று நம்பிக்கை இல்லாத போதிலும் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஈடுபாடு காரணமாகவும் அந்த நாடுகள் வெளிப்படுத்திய நம்பிக்கை காரணமாகவும் எமது மக்கள் இதுவரை காலமும் நம்பிக்கையுடன் பொறுமையாக இருந்தார்கள்.

ஆனால், அந்தப் பிரேரணையில் கூறப்பட்ட, போர்க்குற்ற விசாரணை உட்பட பல விடயங்களை அமுல்படுத்தப் போவதில்லை என்று ஜனாதிபதியும் பிரதமரும் வெளிப்படையாகத் தெரிவித்த பின்னரும் கூட எதற்காக அந்தத் தீர்மானத்தை இலங்கை அரசு நிறைவேற்றுவதற்கு கால அவகாசம் மீண்டும் கொடுக்கப்படவேண்டும் என்று எமது மக்கள் கேள்வி எழுப்பும் நியாயத்தை இந்த நாடுகள் புரிந்துகொள்ளவேண்டும்.

அதனால்தான் சர்வதேச சட்டத்தின்பிரகாரம், மாற்று வழிகளை மேற்கொள்வது குறித்து ஐ. நா. மனித உரிமைகள் சபை அதன் உறுப்பு நாடுகள் ஆகியவை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எமது மக்கள் கேட்கின்றார்கள். இலங்கையை ஐ.நா. பாதுகாப்பு சபை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தவேண்டும் என்றும் அதேசமயம் ஐ. நா. மனித உரிமைகள் சபை இலங்கைக்கான விசேட பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டும்என்றும்கோருவதில்அர்த்தம் இருக்கின்றது.

எமது மக்களின் இந்தக் கோரிக்கைகளை ஐ. நா மற்றும் சர்வதேச சமூகம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோருவதுடன் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் சில தினங்களுக்கு முன்னர் தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ள விடயங்களை நடைமுறைப் படுத்த ஆவன செய்யவேண்டும் என்றும் வலியுறுத்துகின்றேன்.

கடந்த 16 ஆம் திகதியே கிழக்கு மாகாணத்துக்கு வந்த நான் அம்பாறை மற்றும் மட்டக்களப்பின் பல இடங்களிலும் மக்கள் சந்திப்புகள் பலவற்றை நடத்தி இங்கு வாழும் தமிழ் மக்களின் குறைகள், கவலைகள், கஷ்டங்கள் ஆகியவற்றைக் கேட்டறிந்துள்ளேன். தமிழ் மக்களின் போராட்டத்துக்கு அளப்பெரும் தியாகங்களையும் மகத்தான பங்களிப்பையும் செய்துள்ள கிழக்கு மாகாண மக்கள் தொடர்ந்தும் பெரும் இன்னல்கள் மற்றும் அடக்குமுறைகளின் கீழ் வாழ்ந்துவருவதை என்னால் அறிந்துகொள்ள முடிந்தது.

நில ஆக்கிரமிப்பு, காணாமல்போனவர்களின் குடும்பநிலை, கணவன்மார்களை இழந்த பெண்கள் நிலை, வேலை இல்லா நிலைமை என்று பல்வேறு பிரச்சினைகள் மத்தியில் அவர்கள் வாழ்ந்துவருவதைக் கண்டு மனம் நொந்துபோயுள்ளேன். இரு வேறு சமூகங்களுக்கு மத்தியில் வாழ்ந்துவரும் இங்குள்ள மக்களின் நிலைமை பாரதூரமான நிலையில் இருக்கின்றது. எமது மக்கள் 300 க்கும் அதிகமான தமது பூர்வீகக் கிராமங்களை முற்றாக இழந்துவிட்டார்கள். தொடர்ந்தும் அவர்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கம், அரசியல் ஒற்றுமை என்பவற்றைக் காரணம் காட்டி எமது அரசியல் தலைமைகள் இந்தப் பிரச்சினைகளைத் தட்டிக் கழித்து வருகின்றார்கள் என்று மக்கள் என்னிடம் குறை கூறினார்கள். எமக்கான நியாயமான உரித்துக்கள் தொடர்பில் குரல் எழுப்புவதற்கு நாம் பின்நிற்கத் தேவை இல்லை. அதேசமயம் ஏனைய சமூகங்களின் உரிமைகளை மறுக்கும் வகையிலும் நாம் செயற்படத்தேவை இல்லை. சமூகங்களின் சுமூகம் என்பது ஒரு சாராரின் தலைமைகள் நித்திரைக்குப் போகும் நிலையை ஏற்படுத்தக்கூடாது.

கிழக்கு மாகாணத்தில் அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியாக காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதில் நாம் மூலோபாயங்களை வகுத்து செயற்படவேண்டும். இதில் புலம்பெயர் தமிழ் மக்கள் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன். தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் வட மாகாணத்தை விடவும் பெருந் தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் பங்களிப்பையும் செய்தவர்கள் கிழக்கு மாகாண மக்கள் தான். ஆயுத ரீதியான போராட்டம் நடைபெற்றபோது கிழக்கு மாகாண மக்கள் செய்துள்ள பங்களிப்பை நான் கேள்விப்பட்டுள்ளேன். அவர்கள் அரசியல் ரீதியாக மேற்கொண்ட பங்களிப்புக்களை நான் நீதிபதியாக இங்கு கடமையாற்றிய காலங்களில் நேரடியாகக் கண்டுள்ளேன். செழிப்பும் வளமும் மிக்க கிழக்குத்தான், நாளை நாம் வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு சுய நிர்ணய அடிப்படையிலான தீர்வினைப் பெறும்போது எமக்குச் சுபீட்சமான எதிர்காலத்துக்கான அத்திவாரமாக அமையமுடியும்.

இதனைச் சாத்தியமானதாக்க வேறுபாடுகள் அனைத்தையும் களைந்து நாம் ஒன்றுபட்டு செயற்பட முன்வரவேண்டும். நான் அடிக்கடி இங்கு வந்து இங்குள்ள மக்களைச் சந்திக்கவிருக்கின்றேன். மக்களாகிய நீங்கள் என்னையோ அல்லது எனது கட்சி முக்கியஸ்தர்களையோ எந்நேரத்திலும் தொடர்புகொண்டு உங்கள் பிரச்சினைகள், எதிர்பார்ப்புக்கள் பற்றிக் கூறலாம். அவற்றைத் தீர்க்க நாம் எம்மால் ஆனமட்டில் முயற்சி செய்வோம் - என்றார்.

# இனந்தெரியாதோரின் தாக்குதலில் சுதுமலையில் வயோதிபர் படுகாயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 21

மானிப்பாய் - சுதுமலைச் சந்தியில் நேற்றுக் காலை வயோதிபர் ஒருவர் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த 62 வயதுடையவரே தாக்கப்பட்டவராவார்.

மானிப்பாய் அந்தோனியார் தேவாலயத்துக்கு வழிபாடு செய்வதற்காக சென்று கொண்டிருந்தபோதே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் காட்டுமிராண்டித்தனமானது என்பது எல்லாத்தரப்புகளினாலும் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம்.

அந்தச் சட்டம் முழுமையாக மாற்றியமைக்கப்படும் என்பதும் ஏற்கனவே ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஒட்டி வாக்குறுதி வழங்கப்பட்டு நிறைவேற்றப்படாத விடயங்களில் ஒன்று.

அந்தச் சட்டம் இன்னும் மாற்றியமைக்கப்படாவிட்டாலும், அந்தச் சட்டத்தின் கீழ் புதிய வழக்குகள் எவையும் தாக்கல் செய்யப்படுவதில்லை என்ற ஒரு சமாதானம் இலங்கைத் தரப்பினால் முன்வைக்கப்பட்டு வருகிறது.

ஆனால் அதுவும் வழமை போல இலங்கைத் தரப்பினால் கூறப்படும் பச்சைப் பொய்களில் ஒன்றுதான்.

ஓரிரு மாதங்களுக்கு முன்னர் கூட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இருவருக்கு எதிராக ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் அதிலும் கூட இலங்கை அரசின் திருகுதாளத்தனம் எதிரொலிக்கத் தவறவில்லை.

விசுவமடு, புன்னை நீராவிப் பகுதியைச் சேர்ந்த குணபாலசிங்கம் குணசீலன் (வயது 24), கந்தசாமி அரிகரன் (வயது 34) ஆகிய இருவரே கடந்த ஜனவரி 14 ஆம் திகதியும், 15ஆம் திகதியும் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, அப்பிராந்தியத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜே.ரட்ணாயக்காவின் முதல் அறிக்கையின் கீழ், பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவருக்கும்எதிரான குற்றச்சாட்டு என்ன தெரியுமா?

விடுதலைப் புலிகளின் எழுச்சிப்பாடல் அடங்கிய ஒலித்தட்டு ஒன்றை உடைமையில் வைத்திருந்தார் என்று ஒருவரும், அந்த ஒலித்தட்டை தமது வீடியோ கடையில் இருந்து அவருக்கு வழங்கினார் என்று மற்றவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு, கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அந்தச்சட்டப்படி, அந்த வழக்கு விசாரணை முடிந்து தீர்ப்பளிக்கப்படும் வரை அவர்கள் சந்தேக நபர்கள் என்ற பெயரில் விளக்க மறியலில் வாடவேண்டியதுதான்.

கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் போது தமது கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் எழுச்சிப்பாடலை ஒலிக்க விட்டு கூட்டம் திரட்டியவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன். ஜனாதிபதியினால் அவரது கட்சியின் சார்பில் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டவர்.

தமது பின்கதவு இராஜதந்திரத்தினால் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கிய போதும் கூட அங்கஜன் இராமநாதனுக்கு பிரதி அமைச்சர் பதவி கொடுத்து கௌரவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அதற்கு முன்னர் நல்லாட்சி அரசிலும் முக்கிய அரசுப் பிரமுகராக இருந்தவர் அங்கஜன். பிரதி சபாநாயகர் பதவியைக்கூட அவருக்கு வழங்குவதற்கு நல்லாட்சி அரசு தயாராக இருந்தது. ஆனால்கூட்டமைப்பினரின்எதிர்ப்பால் அது கைகூடவில்லை.

ஆக, அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவின் விசேட பாதுகாப்புடன் இருக்கும் அரசுத் தரப்பின் - ஜனாதிபதியின் - எம்.பி., தாம் விரும்பினால் விடுதலைப் புலிகளின் எழுச்சிப் பாடலை பகிரங்கமாக ஒலிக்கவிட்டு, தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்கு ஆள்களைத் திரட்டி, ஆரவாரம் பண்ணலாம். அதற்குப்பரிசாக பிரதி சபாநாயகர் பதவியோ அல்லது பிரதி அமைச்சர் பதவியோ கிட்டும். அவருக்கு எதிராக இந்தச்செயலுக்காக பயங்கரவாதத் தடைச்சட்டம் பாயாது.

ஆனால், சாதாரண சிவிலியன்கள் அதே பாடலை ஒலித்தட்டில் வைத்திருந்தால், அல்லது அந்த ஒலித் தட்டை ஒருவருக்கு வழங்கினால் அது பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் மகா குற்றம்; மிகப் பெரிய பயங்கரவாதச் செயல். பிணையில் விடவே முடியாத மகாபாதகம்.

அப்படித்தான் இலங்கை நீதிமன்றங்கள் கருதும். அத்தகைய நிலையில்தான் இலங்கையின் நீதிமுறைமை உள்ளது. இலங்கையின் நீதித்துறை உள்ளது.

அந்த இருவருக்குமாகபிணை கோரி நீதிமன்றத்தில் வாதாடிய - மன்றாடிய - சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவும் அவரது உதவியாளர்களான சட்டத்தரணிகள் திருமதி எஸ்.விஜயராணி மற்றும் சட்டத்தரணி எஸ்.அர்ஜுனா ஆகியோருக்கு, அந்தப் பிணை மனுக்கள் நிராகரிக்கப்பட்ட பின்னர் இப்படித்தான் மனதுக்குள் நொந்து கொள்ள முடியும். வேறு வழி?

கொழும்பு பரிபாலிக்கும் நீதித்துறையும், சட்டங்களும், சட்டமுறைகளும் அப்படி இருக்கையில் நீதிமன்றமும், அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?

ஒரே செயலைச் செய்த இரு தரப்புக்கள் எவ்வாறு வெவ்வேறாகச் சட்டத்தினால் கையாளப்படுகின்றனர் என்ற நீதித்துறைக் கேலிக்கூத்துக்கு அல்லது பரிகாசத்துக்கு (Mockery Of Justice) இது நல்ல உதாரணம்தான்!

- மின்னல் -

# ஐ.நாவின் யோசனைகளால் எமக்கு பாதிப்பு கிடையாது!

## கூறுகின்றார் லக்ஷ்மன் கிரியெல்ல



கொழும்பு, மார்ச் 21

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யோசனைகளால் நாட்டுக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷமன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் பொது தொழில் முயற்சிகள், டிஜிட் டல் தொழில்நுட்பம் சட்டம் மற்றும் விஞ் ஞான ஆராய்ச்சி அமைச்சுக்கள் மீதான நிதியொதுக்கீட்டு குழுநிலை விவாதத் தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ் வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இராணுவத்தினர் தொடர்பில் தற்போது பேசிவரும் எதிர்க்கட்சியினர், மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில்தான் அதி உயர் பதவியிலிருந்த இராணுவத் தளபதி சிறையிலடைக்கப்பட்டார் என்பதை உணர்ந்து பேசவேண்டும். இலங்கை இணை அனுசரணை வழங்கியுள்ளதை எதிர்ப்போர், நாட்டை மோசமான நிலைக்குத் தள்ளி சர்வதேச ரீதியாக நாடு புறக்கணிப் புக்குள்ளாகுவதற்கு வழி வகுத்த தமது செயற்பாடுகள் தொடர்பில் சிந்திக்க வேண் டும்.

எமது நாட்டுக்கு எதிராக சர்வதேசமும் செயற்பட்ட போது நல்லாட்சி அரசை உரு வாக்கி நாமே அந்த நிலைமையைச் சரி செய்தோம். அதற்காகக் காத்திரமான பேச்சுக்களை மேற்கொள்ள நேர்ந்தது. ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவின் இலங்கை தொடர்பான யோசனைகள் கடந்த மூன்று வருட காலமாக அரசு முன் னெடுத்து வரும் செயற்பாடுகளை வரவேற் கும் விதமாகவே அமைந்துள்ளன.

நாம் சர்வதேசத்தைப் புறக்கணித்து செயற்பட முடியாது. சர்வதேசத்துடன் இணைந்த செயற்பாடுகள் எமது நாட்டுக்கு மிக அவசியமானவை. இலங்கையின் இறைமை, பாதுகாப்பு, ஒருமைப்பாடு தொடர்பான செயற்பாடுகள் வடக்கு, கிழக் கில் காணி விடுவிப்பு, காணாமற்போ னோர் தொடர்பில் அரசு மேற்கொண்டுள்ள செயற்பாடுகளை அந்த ஆணைக்குழு வரவேற்றுள்ளதுடன் பாராட்டியுள்ளது.

அண்மையில் நாம் நடத்திய சர்வகட்சிக் கூட்டத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறை புதிய தேர்தல்முறை தொடர்பில் இணக்கப் பாடு எட்டப்படாவிட்டாலும் மாகாண சபை களைப் பலப்படுத்தும் வகையில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் இணக்கப்பாடு காணப் பட்டுள்ளது. அரசு அதற்கிணங்கவே செயற்படுகின்றது – என்றார். (ஐ)

# ஜெனீவாவில் கால அவகாசம் கோருவதால் அரசுக்கு சிக்கல்

## எச்சரிக்கின்றது சுதந்திரக் கட்சி

ஜெனீவாவில் அரசு மீண்டும் இரண்டு வருட கால அவகாசத்தைக் கோருவதன் மூலம் இலங்கை பெரும் பிரச்சினைக ளைச் சந்திக்க நேரிடும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஈராக்கில் அமெரிக்காவால் இழைக் கப்பட்ட கொலைகளுக்கு பொறுப்புக் கூறமுடியாது என அமெரிக்க வெளி விவகாரச் செயலாளர் கூறியுள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமாக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடர இணங்கப் போவதில்லை என அவர் கூறியுள்ளார். அந்தக் கொலைகள் தொடர்பாக 70 குற் றச்சாட்டுக்கள் உள்ளன.

ஆனால் அது தொடர்பான விசாரணை களுக்கு அமெரிக்கா இணங்கவில்லை. இந்த நிலையில் இலங்கை போன்ற சிறிய நாடுகளை பிடித்துக்கொண்டு இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள் ளன. இதற்கு இந்த அரசு இணை அனு சரணை வழங்கியுள்ளது. அது அவர்கள் நாட்டுக்குச் செய்யும் பெரும் துரோகமா கும்.

அதனால் பிரிட்டனின் பிரேரணைக்கு இணை அனுசரனை வழங்குவதை அரசு வாபஸ் பெற வேண்டும் – என்றார். (ஐ)

# சுதந்திரக் கட்சி நடத்தும் மே தினம் கம்பஹாவில்

கொழும்பு, மார்ச் 21

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் மே தினக் கூட்டத்தை கம்ப ஹாவில் நடத்துவதற்குத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைவரான ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன தலை மையில் இந்தக் கூட்டம் இடம் பெறவுள்ளது.

இது தொடர்பான ஏற்பாடு களை முன்னெடுப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட் டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர் கள் உள்ளிட்ட அனைவரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் மோதல்போக்கைக் கடைப்பிடித்து வரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் போசகர்களில் ஒருவரான சந்திரிகாவுக்கு இந்தக் கூட்டத் தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை தொடர் பான தகவல்கள் எவையும் இது வரை வெளியாகவில்லை. (ஐ)

# உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு விருந்து கொடுத்த இலங்கை அரசு!

ஜெனீவா, மார்ச் 21

இலங்கை தொடர்பாகப் பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளினால் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேர ணையை திருத்துவதற்கான முயற்சிகளில் இறங்கிய இலங்கை அரச தரப்பினர் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு விருந்து கொடுத்துள்ளனர்.

ஜெனீவா சென்றுள்ள அரச தரப்புப் பிரதி நிதிகளான வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம, வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் மற்றும் வெளிவிவகார அமைச்சின் செய லாளர் ரவிநாத் ஆரியசிங்க ஆகியோர் நேற்று முன் தினம் பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் விருந்து பசாரம் ஒன்றுக்கு அழைக்கப்பட்டு, அவர்க ளுக்கு நிலைமைகள் தெளிவுபடுத்தப்பட்டன. இதன்போதே பிரேரணையில் திருத்தங்க ளைச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. (ஐ)

# 150 கிலோ கேரளக் கஞ்சா தலைமன்னாரில் சிக்கியது!



மன்னார், மார்ச் 21

மன்னார் – தலைமன்னார் மேற்கு கடற்கரைப்பகுதியிலிருந்து சுமார் 150 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

நேற்று முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக் கையின்போதே இவ்வாறு கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

ஐந்து மூடைகளிலிருந்து கேர ளக் கஞ்சா மீட்கப்பட்டதாகக் கடற் படை தெரிவித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்பட வில்லை. (ஐ)

# கேகாலை விபத்தில் இருவர் உயிரிழப்பு!

## எண்மர் படுகாயம்

கொழும்பு, மார்ச் 21

கொழும்பு – கண்டி பிரதான வீதி, கேகாலை – கரடுபன சந்தி யில், நேற்றுப் பகல் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தனர். படுகாயமடைந்த எண்மர் வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த காரும் கொழும்பிலிருந்து கண்டி நோக் கிப் பயணித்த இலங்கை போக்கு வரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸொன்றும் நேருக்கு நேரி மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில், காரின் பின் னால் பயணித்த வானொன்றும் காரின் மீது மோதியுள்ளது.

காரில் பயணித்த கணவன், மனைவியான கம்பஹாவைச் சேர்ந்த ஜயந்தி தினுகாடன் (வயது 61), ஆச்சாரிகே பாலனி சந்ரலதா (வயது 54) ஆகியோர் உயிரிழந் தனர். பஸ்ஸில் பயணித்த எண் மர் படுகாயமடைந்தனர்.

மேற்படி இருவரும் கண்டி தலதாமாளிகைக்குச் சென்று விட்டு கொழும்பு திரும்பிக்கொண் டிருந்தபோதே விபத்தை எதிர் கொண்டுள்ளனர்.

விபத்துடன் தொடர்புடைய பஸ் ஸின் சாரதியைக் கைதுசெய் துள்ள பொலிஸார், மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டுள்ள னர். (ஐ)

# சிவ்சங்கர் மேனனை சந்தித்தார் மஹிந்த



இந்தியாவின் முன்னாள் தேசிய பாது காப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பு வந்துள்ள சிவ்சங்கர் மேனன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மஹிந்தவை அவரது இல்லத்துக்குச் சென்று சந்தித்திருந்தார்.

இதன்போது, இரு நாடுகளிலும் நடக்கும் அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும் அவற்றை எதிர்கொண்டு எதிர்காலத்தில் முன்னெடுக்கும் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப் பட்டது.

இந்தச் சந்திப்பின்போது பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் உட்பட முக்கிய பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## நீதியான விசாரணையை எதிர்கொள்ள இலங்கை இராணுவத் தரப்பு தயாரா?

*"போரின் போது இலங்கைப் படையினர் எந்தத் தவறையும் செய்யவில்லை.*

*"படையினரைப் பாதுகாப்பதற்காக எந்தவொரு விசாரணையையும் எதிர்கொள்ளத் தயர்ாக இருக்கிறோம்."*

- இப்படிப் பீற்றியிருக்கின்றார் இலங்கையின் இராணுவத் தளபதி லெப்ஜெனெ்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா.

*"எந்தவொரு விசாரணையை எதிர்கொள்ளவும் நாங்கள் அச்சம் கொள்ளவில்லை. ஏனென்றால் நாங்கள் எந்தக் குற்றமும் இழைக்கவில்லை."* - என்று வேறு அவர் கூறியிருக்கின்றார்.

இப்படி எல்லாம் தமது படைகளைப் பீற்றிக் கொண்டு துணிச்சலாகக் கூறும் இலங்கை இராணுவத் தளபதி, அதற்குப் பின்னர் குறிப்பிடும் விளக்கம்தான் ஹாஸ்யமானது: கேலித்தனமானது.

எந்த விசாரணையும் எதிர்கொள்ளத் தயார் என்று துணிச்சல் மிக்கவர் போல அறிவிக்கும் அவர், ஆனால் இந்த விடயத்தில் *"அனைத்துலக விசாரணை தேவையில்லை; எமது நீதித்துறைக்கு அதற்கான தகுதி உள்ளது."* - என்றும் கூறுகின்றார்.

இதுவே, உண்மையான - நீதியான - பக்கச் சார்பற்ற - விசாரணைக்கு அவர் தயாரில்லை என்பதை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

மடியில் கனமில்லை என்றால் வழியில் பயம் ஏது? அவரது படைகள் யுத்தக் குற்றம் இழைக்கவில்லை என்றால் சர்வதேச விசாரணைக்கு அவர் ஏன் அஞ்ச வேண்டும்? பின்னடிக்க வேண்டும்?

போரின்போது இலங்கைப் படைகள் யுத்தக் குற்றங்களை இழைக்கவேயில்லை என்பது முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைக்கும் எத்தனமாகும்.

அப்படி யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தாராளமாக இழைக்கப்பட்டன என்பதை நிரூபித்துக் காட்டும் பொறுப்பு அந்தக் குற்றங்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உரியது.

நீதியான, நியாயமான, நம்பகத் தன்மையுடைய ஒரு நீதிப் பொறிமுறை இருக்குமானால் அதை அங்கு நிரூபித்துக்காட்டி, சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் - நீதியின் முன் கொண்டு வந்து - பொறுப்புக் கூறலை நிலை நாட்டுவதற்கு பாதிக்கப்பட்ட மக்கள் என்ற முறையில் தமிழர்கள் தங்களின் முழுப்பங்களிப்பை முழுமையாக வழங்குவார்கள். விடயங்களை நிரூபிப்பார்கள்.

*"எந்தவொரு யுத்தத்திலும் பொதுமக்களுக்கு இழப்பு ஏற்படும். அது கடினமான உண்மை"* - என்ற அவரது கூற்று மறுக்கற்பாலதல்ல. ஆனால், இராணுவம் யுத்தக் குற்றங்களைப் புரிவதற்கும், புரிந்த குற்றங்களை மூடி மறைத்து சளாப்புவதற்கும், இந்தப் பொதுவான கூற்றுப் போதுமானதல்ல. இந்தக் கூற்றைக் குறிப்பிட்டு, யுத்தக் குற்றங்களை மூடி மறைத்து விட முடியாது என்பதை அவருக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நியமித்த சர்வதேச நிபுணர்குழு - தனது 'தருஸ்மன் அறிக்கை' மூலம் - இலங்கை யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தாராளமாக இழைக்கப்பட்டுள்ளன என்பதை முறையான் ஆய்வுகள் மூலம் கண்டறிந்து, உறுதிப்படுத்தி, அம்பலப்படுத்தி விட்டது.

ஆகவே, இங்கு - இப்போது - விவகாரம், யுத்தக் குற்றங்கள் இழைக்கப்பட்டனவா, இல்லையா என்பதல்ல.

இழைக்கப்பட்ட அந்த யுத்தக் குற்றங்கள் தொடர்பில் நீதிமுறையான விசாரணை நடத்தி, குற்றமிழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதுதான் இப்போதுள்ள ஒரே பிரச்சினை.

இத்தகைய விடயங்களில் பேரினவாதப் போக்கில் செயற்படுகின்றமையையே தன்னுடைய பரவணிப் போக்காகக் கொண்டுள்ள இலங்கை நீதி முறைமை, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி செய்யாது, பக்கச் சார்பாகவே செயற்படும் என்பதால்தான் சர்ச்சை.

இலங்கை நீதித்துறைக்கு அப்பால், சர்வதேச புலன் விசாரணையாளர்கள், சட்டத்துறையினர், நீதிபதிகள் சம்பந்தப்பட்ட ஒரு நியாயமான நீதிப் பொறிமுறையின் கீழ் விசாரணை நடத்துவதன் மூலம் குற்றமிழைத்தவர்கள் தப்பிப்போகாமல் உறுதிப்படுத்துவதே இப்போது வலியுறுத்தப்படுகின்ற விடயம்.

இராணுவத்தினர் குற்றமிழைக்கவில்லை என்று இராணுவத் தளபதி இன்னும் - இப்போதும் - நம்புவாராயின், சர்வதேச சம்பந்தத்துடனான நியாயமான நீதிப் பொறிமுறையின் முன்னால் அதை நிரூபிக்க அவர் முன்வர வேண்டும்.

இலங்கையின் நீதித்துறை என்ற பேரினவாதத் திரைக்குப் பின்னால் தங்களின் யுத்தக் குற்றங்களை மறைத்து விடலாம் என்ற நம்பிக்கையில் இப்படி அரிதாரப் பேச்சுக்களை பேசுவது அர்த்தமற்றது.

தனது படைகள் யுத்தக் குற்றமிழைக்கவில்லை என்ற உறுதி இருக்குமானால், சர்வதேச நீதிப் பொறிமுறையின் முன்னால் இதைப் பரிசோதித்து நிரூபிக்க அவர் முன் வரவேண்டும் - வெறும் பகட்டுப் பேச்சுகளை பேசி, 'அளப்பு' வதை விடுத்து.

# எத்தகைய சவாலையும் எதிர்கொள்ள நான் தயார்

## கூறுகிறார் கரு ஜயசூரிய



கொழும்பு, மார்ச் 21

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும், சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்துவதற்காகவும் எந்தவொரு சவாலையும் ஏற்கத் தயாராகவே இருக்கின்றேன் என்று சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.

மல்வத்த பீடத்தின் மகாநாயக்க தேரர் மற்றும் ஏனைய சங்க சபைகளின் மகாநாயக்க தேரர்களால், சபாநாயகர் கருஜயசூரியவுக்கு 'விஷ்வகீர்த்தி ஸ்ரீலங்கா ஜனரஞ்சன' விருது நேற்று முன் தினம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சபாநாயகர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

1994 இல் நான் அரசியலுக்குப் பிரவேசித்தேன். அன்று முதல் இன்று வரை மோதல்கள் இன்றி, தூய அரசியலையே முன்னெடுத்துவருகின்றேன். இதுவே எனது கொள்கையாகும்.

அரசியல் பிரசாரத்துக்காக 'கட்டவுட்', 'போஸ்டர்', 'பனர்', 'பொலித்தீன்' போன்றவற்றை பயன்படுத்தாது, எதிர்கால அரசியல் பிரமுகர்களுக்கு சிறப்பான முன்னுதாரணத்தை வழங்கியுள்ளேன்.

கறைபடியாத கரத்துடன் அரசியலுக்குப் பிரவேசித்த நான், வெளியேறும் போதும் கௌரவமாக வெளியேறவே முற்படுகின்றேன்.

நாட்டுமக்களுக்குநீதி, நேர்மை, சட்டம், ஒழுங்கு இவற்றை நிலைநிறுத்த எத்தகைய சவால்கள் வந்தாலும் ஏற்றுக்கொள்வேன். அதனூடாக ஜனநாயகத்தைப் பாதுகாப்பேன்.

நான் பிறப்பு ரீதியாக சிங்கள, பௌத்தனாக இருந்தாலும் நான் இனவாதியோ, மதவாதியோ அல்லன். எனது இனம், எனது மதம், எனது பிறப்புடன் கிடைத்த ஒன்றே தவிர, நான் கேட்டுப் பெற்றவையல்ல. புத்தபிரானின் போதனைகளின் படி ஏனைய மதங்களுக்கும் இனங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும்.

1956 ஆம் ஆண்டு ஏற்பட்ட சமூகபுரட்சிக்குஅக்காலஆணைக் குழு அறிக்கைகள் காரணமாக இருந்தன. அவை எனது வாழ்விலும் தாக்கத்தை செலுத்தின.

அதன் பிறகு இராணுவ அதிகாரியாகவும் தொடர்ந்து தனியார் துறையில் 32 வருடமும் சேவை புரிந்தேன்.

வெளிநாட்டுத் தூதுவராகவும், நகர பிதா, மாகாண சபை எதிரணித்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், அத்துடன் தற்போதைய சபாநாயகர் ஆகிய பதவிகளை வகித்த நான், எனது கடமையையும் பொறுப்பையும் சரியாக நிறைவேற்றி வந்துள்ளேன் – என்றார்.

# மைத்திரியின் கருத்துகளை புறமொதுக்குகின்றது அரசு!

## சாடுகின்றார் மஹிந்த



கொழும்பு, மார்ச் 21

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்களை அரசு புறக்கணிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

அவிசாவளை – தல்துவ பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எமது ஆட்சிக் காலத்தில் வரிகள் அறவிடப்பட்டன எனத் தெரிவித்து, அவற்றைவிட 2 மடங்குகள் அதிகமான வரிகளைத் தற்போதைய அரசு அறவிடுகின்றது.

நெடுஞ்சாலைகள் அமைப்பு விடயத்தில், ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கள் புறக்கணிப்பட்டுள்ளன.

அத்துடன், இதுவரை அரசு ஆட்சி செய்த நாள்களில் பழிவாங்கல்களுக்குச் செலவழித்த காலமே அதிகம் – என்றார். (ஐ)

## மஸ்கெலியாவில் பதற்றம்!

*ஹற்றன், மார்ச் 21*

*பிரதேச சபையால், சிவனொளிபாதமலையின் அடிவாரத்தில் வைக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகைக்கு விசமிகள் சிலர் தார் ஊற்றியச் சம்பவத்தையடுத்து, அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது.*

*இதனையடுத்து, மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி ரோன் ரத்நாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் மற்றும் நோர்வூட் பொலிஸார் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளதுடன் நிலைமையைக் கட் டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.*

*பெயர்ப் பலகையைச் சீரமைக்கும் நடவடிக்கைகள் உடனடியாக முன்னெடுக்கப்பட்டது. (ஐ)*

## அங்கொட லொக்காவின் உதவியாளர் நேற்று கைது

கொழும்பு, மார்ச் 21

அங்கொட லொக்காவின் உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

'கடுவெல பபி' என அழைக்கப்படும் இசுறுசமிந்தசமரதுங்க என்ற சந்தேக நபரே கடுவெல – பிட்டுகல பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

சந்தேகநபரிடமிருந்து சுமார் 600 கிராம் ஹெறொய்ன் மற்றும் ஒரு கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளார் என அவர் குறிப் பிட்டார். (ஐ)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

நல்லூர் சங்கிலியன் மன்றம் சனசமூக நிலையத்தின் 74 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 15 நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதன் ஓர் அங்கமாக இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மன்றக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

இதில், குருதியில் கொழுப்பு அளவு பரிசோதனை, குருதியில் சர்க்கரை அளவுப் பரிசோதனை, சிறுநீரில் புரதம் வெளியேறுவதற்கான அளவைப் பரிசோதித்தல், கண்ணில் குறைபாடு உடையோருக்குப் பரிசோதித்து இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன. (ஐ)

### நாளை

22.03.2019
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: துதியை பி.இ. 4.03 வரை.
திதி : அத்தம் அமிர்தம் பி.ப.01.14 வரை.
இராகுகாலம் : 10.47 – 12.17
சுப நேரம் : 06.17 – 07.47

# நாகபூஷணி ஆலயக் காணியை கோருகின்றார் பௌத்த பிக்கு!

## தொடர்ந்தும் பௌத்தமயமாகும் வவுனியா

வவுனியா, மார்ச் 21

வவுனியா – மூனாமடுவில் நாக பூஷணி அம்மன் ஆலயம் அமைந்துள்ள பகுதியில், இராணுவத்தால் வழிப்படப்பட்ட புத்தர் சிலை உள்ள காணியை வழங்குமாறு பௌத்த பிக்கு ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் அந்தக் கோரிக்கையை வவுனியா மாவட்ட செயலகத்திடம் முன்வைத்துள்ளார்.

வவுனியா – மூனாமடுவில் உள்ள நாகபூஷணி அம்மன் ஆலயம் நீண்ட காலமாக அப்பகுதி மக்கள் மற்றும் விசாயிகளின் வழிபாட்டுத் தெய்வமாக இருந்து வந்துள்ளது.

1995ஆம் ஆண்டு அப்பகுதி இராணுவத்தால் கையகப்படுத்தப் பட்டது. அதன் பின்னர் இராணுவத்தினர் தாம் அமைத்த இராணுவ முகாமில் வழிபாட்டுக்காகச் சிமெந்தினால் புத்தர் சிலை ஒன்றை நிறுவினர்.

ஆனால் தற்போது அந்தப் பகுதிகள் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டபோதும் புத்தர் சிலை அவ்விடத்திலிருந்து அகற்றப்படவில்லை.

இந்நிலையில், வவுனியாவில் உள்ள பௌத்த பிக்கு ஒருவர் அந்தப் புத்தர் சிலை அமைந்துள்ள காணியை ஒப்படைக்குமாறு மாவட்ட செயலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் இவ்விடயம் தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடியே தீர்மானம் எடுக்கப்படும் என மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மூனாமடு நாக பூஷணி அம்மன் ஆலயக் காணி ஆலயத்திடமே ஒப்படைக்கப்படவேண்டும் என வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றிய செயலாளர் ஜெ.மயூரக்குருக்கள் செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தக் குறிப்பில், 'பாரம்பரியமும் ஆதாரங்களும் நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கே உரியவை. அதனை வேறு யாரும் உரிமை கோரவோ கையகப்படுத்தவோ முடியாது.

வடக்கில் புத்தர் இருப்பது அநேகமாகத் தனியார் காணிகளிலேதான். எனவே புத்தரை வைத்த இடமெல்லாம் சொந்தங்கொண்டாட, நினைப்பதும் தமிழர்களின் பாரம்பரிய இடங்களைக் கையகப்படுத்த நினைப்பதும் தவறான பார்வைகளைக் கொண்டுவரும்.

எனவே அப்குதியில் உள்ள இந்து ஆலயத்துக்கு மக்கள் வழிப்பாட்டை மேற்கோள்ள ஏதுவாக புத்தர் சிலையினை அகற்றி, அதனை நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு வழங்க வேண்டும் என்பதில் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் உறுதியாகவுள்ளது' – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 21ஆம் திகதி வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பெலியத்த துப்பாக்கிச் சூட்டில் ஐ.தே.கவின் உறுப்பினர் காயம்!

கொழும்பு, மார்ச் 21

பெலியத்த 'பல்லத்தர' மோதரவான பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினரொருவர் காயமடைந்துள்ளார்.

இந்தத் துப்பாக்கிச்சூடு நேற்று அவரது வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் பெலியத்த பிரதேச சபையின் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் கபில அமரக்கோன் காயமடைந்தார்.

சம்பவத்தில் காயமடைந்த பிரதேச சபை உறுப்பினர் சிகிச்சைக்காக தங்காலை வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே, இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ரணிலின் அமைச்சு ரிஷாத்துக்கு நேற்று வெளியானது வர்த்தமானி

கொழும்பு, மார்ச் 21

திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சராக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி அமைச்சுக்கு மேலதிகமாக இந்த அமைச்சுப் பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டது. இதற்கு முன்னர் இந்த அமைச்சுப் பதவி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சமாதான நீதிவான்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த – சமாதான நீதிவான்களாக பதவி வகிக்கும் – நீண்ட கால சேவையை ஆற்றி வரும் – உறுப்பினர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வொன்று யாழ் மாவட்ட சர்வோதய அலுவலகத்தில் இடம்பெற உள்ளது.

இச் சங்கத்தில் அங்கத்துவம் வகிப்பவர்கள் மற்றும் இதுவரை அங்கத்தவராக இணையாதவர்கள் சர்வோதய காரியாலயத்தில் தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அதன் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ

# மைத்திரிபாலவே சு.க. வேட்பாளர்!

## துமிந்த திசாநாயக்க திட்டவட்டம்



கொழும்பு, மார்ச் 21

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எந்த குழப்பமுமில்லை. எமது ஒரே வேட்பாளர், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாத்திரம்தான் என தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க.

நொச்சியாகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனைக் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவில்லையென எந்த சந்தர்ப்பத்திலும் மைத்திரிபால சிறிசேன அறிவிக்கவில்லை. அவர் அப்படி அறிவிக்காதவரை இன்னொரு வேட்பாளரைத் தேட வேண்டிய அவசியமில்லை என்றும் துமிந்த குறிப்பிட்டார். (ஐ)

# மின் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 21

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை –

வவுனியா பிரதேசத்தில்–

பட்டாணிச்சூர் கிராமத்தில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)




# முன்னிருக்கைக்கு முண்டி அடிக்காதீர்

முன்னிருக்கைக்கு முண்டி அடிப்போர் எமது தேசத்தில் அதிகமாக தம்மை வெளிப்படுத்தி வருவதைக் காண்கின்றோம். தமது தீய செயல்களை மறைத்து சமூகத்தை வழிகாட்டும் தலைவர்களாக வரவே ஆவல் கொண்ட பலருக்கு நற்செய்தி சொல்லும் வார்த்தை இதோ.–

"உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்குப் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" என்று கூறப் பட்டுள்ளது.

மாலை மரியாதைக்காக முன்னிருக்கைகளுக்கு முண்டி அடிப்போரை சாடும் இறை வார்த்தைகள் இவை. எமது வாழ்விலும் இத் தவக்காலத்தில் சமூக மாற்றத்திற்காக, சமூக விரோத செயல்களில் இருந்து விடுபடும் செயல்களில் இன் றைய இளையோர், சிறுவர்கள் மட்டிலும் ஒவ்வொருவரது பணிகள் மூலமும் நல் வழிகாட்ட முன்வர வேண்டியது எமது ஆன்மீகத்தின் செயல்களாக வெளிப்படுத்தப்பட வேண்டும். தவறி செல்வோரை நல் வழியில் கூட்டிச் செல்லும் வழகாட்டியாக தவக்காலப் பயணத்தை அர்த்தமுள்ளதாக்க, எம் எதிரே காணும் ஈனச் செயல்களில் இருந்து சிறுவர், இளையோரை பாதுகாக்கும் முயற்சிகளும் தவக் காலத்தின் நற்செயலாக வெளிப்படுத்தும் அழைப்பாக ஏற்றுக் கொள்வோமா?

செ.யோசப்பாலா

# மாரப்பனவின் ஜெனீவா உரையை நான் வெட்டித் திருத்தியுள்ளேன்!

## மைத்திரிபால அதிரடிக் கருத்து

கொழும்பு, மார்ச் 21

வெளிநாட்டமைச்சர் திலக் மாரப்பனவுக்கும் அமைச்சின் செயலாளருக்கும் என்ன நடக்கிறதென்பதே தெரியாது. உத்தரவுகள் எல்லாம் பிரதமர் அலுவலகத்தில் இருந்துதான் செல்கின்றன. ஜெனீவாவில் மாரப்பன ஆற்றவுள்ள உரையை வாசித்து நான் வெட்டினேன். திருத்தங்களை செய்தேன்.

– இப்படி தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்ளுக்கு இராப்போசனம் வழங்கி அவர்களுடன் நீண்ட அரசியல் பேச்சுக்களை நடத்தினார் ஜனாதிபதி.

தினேஷ் குணவர்தன, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில , திஸ்ஸ விதாரண , ராஜா கொலுரே , டியூ குணசேகர ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



இந்த விருந்தில் சுடச் சுட அப்பம் பரிமாறப்பட்டது

ஜெனீவா விவகாரம் குறித்து இங்கு விசனத்துடன் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, அது தனது கையை மீறி நடந்திருப்பதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜெனீவா விவகாரம் குறித்து நான் இறுதி நேரமே அறிவுறுத்தப்பட்டேன். அமைச்சர் திலக் மாரப்பனவை அழைத்து அவர் வாசிக்கவுள்ள அறிக்கையைக் கேட்டேன். அதில் உள்ள பல விடயங்களை ஏற்க முடியாது. அதனால் திருத்தினேன். நான் திருத்திய அறிக்கையையே அவர் வாசிக்கவுள்ளார். அவருக்கும் தெரியாமல் சில விடயங்கள் நடக்கின்றன. பிரதமர் அலுவலகம் இயக்குகின்றது. ஆனால் நான் யார் என்பதை பிரதமருக்கு விரைவில் காட்டுவேன் –என்றும் இங்கு கூறியுள்ளார் ஜனாதிபதி.

# அருணாச்சலப் பிரதேசத்தில் பா.ஜ.கவை விட்டு கொத்துக் கொத்தாக வெளியேறும் தலைவர்கள்

## மோடியின் தலைமைக்குப் பெரும் பின்னடைவு எனத் தகவல்

மக்களவைத் தேர்தல், சட்டப்பேரவைத் தேர்தல் ஆகியவற்றில் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டமையை அடுத்து, கடந்த சில நாள்களில் வடகிழக்கு மாநிலமான அருணாச்சலப் பிரதேச பா.ஜ.கவில் இருந்து 25இற்கும் மேற்பட்ட தலைவர்கள் திடீரென விலகியுள்ளனர்.

மக்களவைத் தேர்தல் வரும் நிலையில் பா.ஜ.கவில் இருந்து கூட்டம் கூட்டமாக நிர்வாகிகள் விலகியுள்ளமை அக்கட்சிக்குப் பெரும் பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது. விலகியவர்கள் அனைவரும் மேகாலயா முதல்வர் கான்ராட் சங்மாவின் தேசிய மக்கள் கட்சியில் இணைந்துள்ளனர்.

வரும் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி சிக்கிம், அருணாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களுக்கு சட்டப்பேரவை தேர்தலும், மக்களவைத் தேர்தலும் நடைபெற இருக்கின்றன. அருணாச்சலப் பிரதேச சட்டப்பேரவையின் 60 இடங்களில் 54 இடங்களுக்கான வேட்பாளர்களை பா.ஜ.க. தலைமை கடந்த சில நாள்களுக்கு முன் அறிவித்தது.

இந்தத் தேர்தலில் ஏற்கெனவே போட்டியிட்ட பலருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. இதனால், அதிருப்தி அடைந்த பா.ஜ.க. நிர்வாகிகள் 25இற்கும் மேற்பட்டோர் கடந்த சில நாள்களில் மட்டும் பா.ஜ.கவில் இருந்து விலகியுள்ளனர்.

அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் பா.ஜ.கவின் பொதுச்செயலாலர் ஜர்பும் காம்பின், உள்துறை அமைச்சர் வெய், சுற்றுலாத்துறை அமைச்சர் ஜார்கர் காம்லின், 6 எம்.எல்.ஏக்கள் ஆகியோர் விலகியவர்களில் மிகவும் முக்கியமானவர்கள். இவர்கள் அனைவரும் பா.ஜ.கவில் இருந்து விலகி, கான்ராட் சங்மாவின், தேசிய மக்கள் கட்சியில்(என்பிபி) சேர்ந்து விட்டனர்.

அருணாச்சலப் பிரதேச பா.ஜ.கவைச் சேர்ந்த வெய், ஜர்கர், ஜர்பும் ஆகியோரைத்தவிர்த்து பா.ஜ.கவின் எம்.எல்.ஏக்கள் தாங்வாங் வாங்கம், தபுக் தகு, பனி தரம், பாங்கா பாகே, வாங்லிங் லோவன்டாங், கார்டோ யெக்கியோர், முன்னாள் அமைச்சர் செரிங் ஜர்னே ஆகியோர் பா.ஜ.கவில் இருந்து விலகியுள்ளனர்.

தற்போது மேகாலயாவில் பா.ஜ.கவுடன் இணைந்து தேசிய மக்கள் கட்சி ஆட்சியில் இருக்கிறது. இப்போது அருணாச்சலப் பிரேதேசத்தில் பா.ஜ.கவுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதால், அங்கு பா.ஜ.கவுடன் சேராமல் தனித்து நிற்கும் முடிவை தேசிய மக்கள. கட்சி எடுத்துள்ளது.

# விதியாசமான பெயர்களில் எல்லாம் புதிய, புதிய அரசியல் கட்சிகள் பதிவு

## இந்திய ஜனநாயகத்தின் விநோதங்கள்

இந்தியாவில் அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 2,301 ஆக உயர்ந்துள்ளது. இவற்றில் வித்தியாசமானப் பெயர்களில் புதிய கட்சிகள் பதிவாகி இருக்கின்றமையும் தெரியவந்துள்ளது.

வித்தியாசமானப் பெயர்களில் டுவென்டி 20 கட்சி, ஜாக்தே ரஹோ பார்ட்டி(விழித்திரு கட்சி), இந்திய காதலர்கள் கட்சி, அமைதியான வாழ்க்கை கட்சி, சூப்பர் தேசியக் கட்சி, வாக்காளர்கள் கட்சி, எம்எல்ஏ கட்சி, நம்பிக்கை கட்சி, அனைத்தையும் விட பெரிய கட்சி – எனப் பட்டியல் தொடர்கிறது.

இவை பதிவானவை என்றாலும் இன்னும் இவற்றுக்கு தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதால் அவர்கள் தம் சின்னங்களில் போட்டியிட முடியாது. இதற்காக அரசியல் கட்சிகளுக்காக ஆணையம் ஒதுக்கி உள்ள பொதுச் சின்னங்களில் ஒன்றை அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தப் பட்டியலில் தற்போது 86 சின்னங்கள் இடம் பெற்றுள்ளன.

இது குறித்து மத்திய தேர்தல் ஆணைய வட்டாரம் கூறும்போது, '20/20 கிரிக்கெட் போட்டியைக் கண்டு கவர்ந்த கேரளவாசிகளால் டுவென்டி 20 கட்சி தொடங்கப்பட்டுள்ளது. இந்திய காதலர்கள் கட்சியின் சின்னம், தாஜ்மஹாலின் உள்ளே இதயம் வரையப்பட்டுஅதில் அம்புக்குறி எய்த படி வரையப்பட்டுள்ளது. புதியு சந்ததியின் மக்கள் கட்சி கோயம்புத்தூரில் இருந்து பதிவாகிஉள்ளது. தேர்தல் சமயங்களில் பதிவாகும் பெரும்பாலானக் கட்சிகள் கறுப்புப்பணத்தை வெள்ளையாக்கவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன' எனத் தெரிவித்தன.

தேர்தல் எனும் பெயரில்வெளிநாடு மற்றும் உள்நாடுகளில் நிதி திரட்டும் கட்சிகளை தேர்தல் ஆணையம் தீவிரமாகக்கண்காணித்து வருகிறது. இதில் கடந்த 2006 ஆம் வருடம்சிக்கிய255 கட்சிகள் மீது மத்திய நேரடிய வரிகள் வாரியத்தால் வழக்குகள் பதிவாகி நடைபெற்று வருகின்றன. புதிய கட்சிகள் சட்டப்பேரவை அல்லது மக்களவை தேர்தலில் போட்டியிடுகையில் குறிப்பிட்ட சதவிகிதம் வாக்குகளுடன் தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டும். அப்போதுதான் அவர்களின் கட்சிக்கு தேர்தல் ஆணையம் அங்கீகாரம் கிடைக்கும். அங்கீகாரத்திற்கு பின் அவை எந்த தேர்தலிலும் போட்டியிடாமல் இருந்தால் குறிப்பிட்ட காலத்திற்கு பின் அதுவும் ரத்தும் செய்யப்பட்டுவிடும்.

மக்களவை தேர்தல் அறிவிக்கப்பட்ட மார்ச் 10 ஆம் தேதிக்கு முன்தினம் வரை ஆணையத்தில் பதிவான மொத்த அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 2,301 ஆகும். இதில் தேசியக் கட்சிகளாக ஏழு, மாநிலக்கட்சிகளாக 59ஆம் அங்கீகாரம் பெற்றுள்ளன. மக்களவை தேர்தலை குறி வைத்து பெப்ரவரி முதல் மார்ச் வரை என 37 நாள்களில் மட்டும் 149 கட்சிகள் புதிதாகப் பதிவு பெற்றுள்ளன.

தேர்தலில் போட்டியிடாமல் உள்ள புதிய கட்சிகளின் பதிவை ரத்துச் செய்ய வேண்டும் என ஆணையம் அனுப்பிய யோசனை பல ஆண்டுகளாக மத்திய சட்டத்துறை அமைச்சகத்தால் சட்டத்திருத்தம் செய்ய நிலுவையில் உள்ளது.

யாழ் ஈ. - சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் புதிய ஆங்கிலப் பாடநெறி ஆரம்பம்
DIPLOMA IN ENGLISH (Spoken English)
(06 மாதங்கள்)
ஆரம்பம் : 23.03.2019 மதியம் 12.30 மணி
(வார இறுதி நாள்களில் சனி, ஞாயிறு தினங்களில் மதியம் 12.30 - 3.00 வரை நடைபெறும் பாடநெறி,
வடக்கு மாகாணத்தில் பல்லாயிரக்காணக்கான மாணவர்களின் ஒரே தெரிவு
E - CITY
COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
இல.327D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
(வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்)
021 221 7106 / 077 340 0418/ 077 061 5242 / 077492 4166
web : www.ecitycollege.lk

# கோவா புதிய முதல்வர் சாவந்த் பெரும்பான்மையை நிரூபித்தார்

பனாஜி,மார்ச்21

கோவா சட்டப்பேரவையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் முதல்வர் பிரமோத் சவாந்த் வெற்றி பெற்றார்.

கோவா முதல்வராக இருந்த மனோகர் பாரிக்கர் மறைந்த நிலையில், புதிய முதல்வராக பாரதீய ஜனதாக் கட்சியின் பிரமோத் சாவந்த் நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணி அளவில் பதவியேற்றார். அதிக உறுப்பினர்களை கொண்ட தனிப்பெரும் கட்சியான தங்களை ஆட்சி அமைக்க அழைக்க வேண்டும் என ஆளுநரிடம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்தது.

இதையடுத்து பா.ஜ.க. நம்பிக்கை வாக்கெடுப்பு மூலம் தனது பெரும்பான்மையை நிரூபிக்க முடிவுசெய்தது. இதன்படி, நேற்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த ஆளுநர் அனுமதி அளித்தார். இதற்காக கோவா சட்டமன்றச் சிறப்புக் கூட்டம் நேற்றுக் காலை 11:30 மணிக்கு கூடியது.

நம்பிக்கை வாக்கெடுப்பில் புதிய முதல்வர் பிரமோத் சவாந்த் வெற்றி பெற்றுள்ளார். 20 எம்.எல்.ஏக்கள் அவருக்கு ஆதரவாக வாக்களித்தனர். 36 உறுப்பினர்களை கொண்ட கோவா சட்டப்பேரவையில் பா.ஜ.க. அரசு பெரும்பான்மையை நிரூபித்துள்ளது.


World Class British
IT Degree Programme
@ ICBT Jaffna Campus
Apply Now For New Intake 2019
EQAA
ICBT DUAL HNDs Software Engineering + Computing
Duration 2 Years
Cardiff Metropolitan University
UGC RECOGNIZED
BSc (Hons) SOFTWARE ENGINEERING
Offered by Cardiff Metropolitan University, UK
Duration 1 year
Entry Qualifications
Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.
Why Study ICBT ?
• Qualified Lecturer Panel
• High Quality Learning Experience
• Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
• Easy Payment schemes
Week End Part Time Classes
A/L|O/L → HND → BSc DEGREE COMPLETION IN SRI LANKA
0770 746 553 | 0769 289 784
ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector
www.icbt.lk

உலகச் செய்திகள் | காலைக்கதிர் Kalaikathir | வியாழக்கிழமை 21.03.2019 07

# புயலின் கோரத் தாண்டவத்தில் ஸிம்பாப்வேயில் 300பேர் சாவு!

தெற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான ஸிம்பாப்வேயில் வீசி வரும் இடாய் புயலின் பயங்கரத் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 300 ஆக அதிகரித்துள்ளது.

அருகருகே உள்ள மூன்று தெற்கு ஆப்பிரிக்க நாடுகளில் பதினைந்து லட்சம் மக்கள் இடாய் புயலில் சிக்கி கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என ஐ.நா. மற்றும் அரசு உயரதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து மாநில அமைச்சர் ஜுலி மாயோ பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில், "அரசு கணக்குப்படி புயலில் பலியானோர் எண்ணிக்கை ஆரம்பத்தில் 100ஆக இருந்தது. ஆனால் தற்போது வரும் செய்திகளின்படி பார்க்கையில் அதன் எண்ணிக்கை 300 ஆக அதிகரித்துள்ளது. உரிய தகவல்கள் கிடைத்த பிறகு கூடிய விரைவில் இது அதிகார பூர்வமாக அறிவிக்கப்படும்.

வெள்ளத்தில் நிறைய உடல்கள் மிதந்து வந்து கொண்டிருக்கின்றன. அனைத்து வெள்ளப் போக்குகளும் மொஸாம்பிக் நோக்கிச் செல்வதால் பெரும்பாலான உடல்கள் அந்நாட்டை நோக்கி மிதந்து சென்றிருக்கக் கூடும் என்றும் கணிக்க வேண்டியிருக்கிறது.

இது தவிர வெள்ளத்தில் மாயமானவர்களின் எண்ணிக்கை 214 ஆக அதிகரித்துள்ளது. கரையொதுங்கிய உடல்களின் எண்ணிக்கை மட்டும் 44 ஆகும்.

இடாய் புயலின் பயங்கரத் தாக்குதலால் கிழக்கு ஸிம்பாப்வேயில் பெரும் சேதாரங்களும் இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக சிமானிமானி நகரத்தில் இதன் தாக்கம் கடுமையாக ஏற்பட்டுள்ளது" - இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.



ஸிம்பாப்வேயில் புயலில் உயிரிழந்தோரை புதைக்கும் பணியில் உள்ளூர் மக்கள்.



வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பாலத்தின் எஞ்சியபகுதி.

**மொஸாம்பிக்**

மொஸாம்பிக், ஸிம்பாப்வே மற்றும் மலாவி ஆகிய நாடுகளில் இடாய் புயலின் கோரத் தாண்டவத்தால் நேற்று முன்தின தகவலின்படி பல நூறு பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் அதிகரித்து வரும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை சரியாக அறிவிக்கப்படவில்லை. அனைத்து தகவல்தொழில்நுட்ப சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளமையால் எண்ணிக்கை கள் தாமதமாகவே வரும் என்று கூறுகிறார்கள்.

நூற்றுக்கணக்கானவர்களைக் காணவில்லை. பின்தங்கிய கிராமப் புறப் பகுதிகளில் சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளமையால் பல்லாயிரக்கணக்கானோர் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்நாட்டு பேரிடர் மீட்பு சேவைகள் வேகமாகச் செயல்படாத நிலை ஏற்பட்டுள்ளதால் இங்கு 15லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கடும் சிக்கல்களை சந்தித்து வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

# நெதர்லாந்தில் சூடு நடத்தியவர் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தவரா?

## பொலிஸார் அவரிடம் தீவிர விசாரணை



ஆம்ஸ்ட்ரடாம்,மார்ச்21

நெதர்லாந்தில் கடந்த திங்களன்று துப்பாக்கிச்சூட்டு தாக்குதல் நடத்திய துருக்கி வாலிபர் கைது செய்யப்பட்டார். அவர் ஐ.எஸ். பயங்கரவாதியா என அறிவதற்கான பொலிஸ் விசாரணை நடைபெற்று வருகிறது.

நெதர்லாந்தின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான உட்ரெச்சில் டிராம் வண்டி ஒன்று சென்று கொண்டிருந்தது. அதில் ஏறிய மர்மநபர் ஒருவர் திடீரென அங்கு இருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டார். இதில் 3 பேர் பலியாகினர். 5 பேர் படுகாயம் அடைந்தனர்.

துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பி ஓடிய துருக்கி நாட்டை சேர்ந்த கோக்மென் டானிஸ் (வயது 35) என்பவரை பொலிஸார் சற்று நேரத்தில் கைது செய்தனர். எனினும் தாக்குதலுக்கான காரணம் என்ன என்பது தெரியவரவில்லை. கைது செய்யப்பட்டு இருக்கும் கோக்மென் டானிஸ், ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பட்டவர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே இந்த தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தின் பங்கு இருக்குமோ என சந்தேகிக்கும் பொலி ஸார் அந்தக் கோணத்தில் தீவிரவிசாரணை நடத்திவருகின்றனர்.

# திமிங்கலத்தின் வயிற்றுக்குள் 40 கிலோ பிளாஸ்டிக் கழிவு!

பிலிப்பீன்ஸில் இறந்த திமிங்கலத்தின் வயிற்றில் 40 கிலோ பிளாஸ்டிக் கழிவு இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிலிப்பீன்ஸின் படாங்காஸ் மாகாணம் மபினி நகரில் உள்ள கடலில் சுமார் 16 அடி நீளம் கொண்ட திமிங்கலம் ஒன்று இறந்த நிலையில் கரை ஒதுங்கியது. சுற்றுச்சூழல் ஆராய்ச்சியாளர்கள் அந்த திமிங்கலத்தைக் கைப்பற்றி ஆய்வு செய்தனர்.

திமிங்கலத்தின் வயிற்றுக்குள் அரிசி பைகள் உள்பட சுமார் 40 கிலோ பிளாஸ்டிக் கழிவுகள் தேங்கியிருந்தமையைக் கண்டு ஆராய்ச்சியாளர்கள் அதிர்ந்து போயினர். பிளாஸ்டிக் கழிவுகள் வயிற்றில் தேங்கியமையால் முறையாக இரை உண்ண முடியாமல் தவித்துவந்த அந்தத் திமிங்கலம் நோய்வாய்பட்டு இறந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.



பிலிப்பீன்ஸில் அதிர்ச்சித் தகவல்

கடந்த ஆண்டு ஜுன் மாதம் தாய்லாந்தில் இறந்த மற்றொரு திமிங்கலத்தின் வயிற்றில் 80 கிலோ பிளாஸ்டிக் கழிவுகள் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பிலிப்பீன்ஸிலும் உயிரிழந்த வேறு திமிங்கலம் ஒன்றின் வயிற்றிலிருந்து 6 கிலோ பிளாஸ்டிக் கழிவுகள் எடுக்கப்பட்டன.

பெருங்கடல் பகுதியில் சீனா, இந்தோனேசியா, பிலிப்பீன்ஸ், வியட்நாம் மற்றும் தாய்லாந்து ஆகிய 5 ஆசிய நாடுகளில் பிளாஸ்டிக் கழிவுகள் பெரும் பிரச்சினையாக உள்ளன. இதனைத் தடுக்க அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# ஏலத்தில் ரூ.25 கோடிக்கு விற்பனையான பந்தயப் புறா

புருக்கிஸ்,மார்ச்21


பந்தயப் புறா ஒன்று சுமார் 25 கோடி ரூபா பெறுமதிக்கு விலைக்குப் போயிருக்கின்றது.

பெல்ஜியம் நாட்டின் மேற்கு பிளாண்டர்ஸ் மாகாணத்தை சேர்ந்த ஜோல் வெர்வெட் (வயது 63) என்பவர் பந்தய புறா ஒன்றை வளர்த்து வந்தார்.

அர்மாண்டோ எனப் பெயரிடப்பட்ட இந்த புறா, தொடர்ந்து 3 பந்தயங்களில் சாம்பியன் பட்டம் பெற்றுள்ளது.

ஐந்து வயதே ஆன அர்மாண்டோ புறாக்களின் லூயிஸ் ஹாமில்டன் என செல்லமாக அழைக்கப்படுகிறது. லூயிஸ் ஹாமில்டன் இங்கிலாந்தை சேர்ந்த கார் பந்தய வீரர் என்பதும், இவர் 5 முறை 'பார்முலா வன்' பந்தயத்தில் உலக சாம்பியன் பட்டம் வென்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

இந்த நிலையில் புறாவை ஏலத்தில் விடும் 'பிபா' எனப்படும் இணையதள நிறுவனம் அர்மாண்டோவை சமீபத்தில் ஏலத்தில் விட்டது. இதில் வரலாறு காணாத வகையில் 12லட்சத்து 50 ஆயிரம் யூரோவுக்கு (இலங்கை நாணய மதிப்பில்மதிப்பில் சுமார் ரூ.25கோடிக்கு) 'அர்மாண்டோ' ஏலம் போனது.



சீனாவைச்சேர்ந்த இருவர் அதி சிறந்த இந்தப் பந்தய புறாவை ஏலத்தில் எடுத்தனர். தற்போது ஓய்வுக்காலத்தில் மகிழ்ச்சியாக இருக்கும் அர்மாண்டோவை அதன் புதிய உரிமையாளர்கள் இனப்பெருக்கத்துக்காகப் பயன்படுத்துவார்கள் எனத் தெரிகிறது.

# 9 நிமிடங்களில் 6 குழந்தைகளை பிரசவித்த அமெரிக்கப் பெண்மணி

டெக்சாஸ்,மார்ச்21

அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர் 9 நிமிடங்களில் 6 குழந்தைகளைப் பெற்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.



அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஹியூஸ்டன் நகரில் வசிக்கும் தெல்மா சியாகா என்ற பெண் பிரசவத்துக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சில தினங்களுக்கு முன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பெண் அதிகாலை 4.50 முதல் 4.59 மணிக்குள், அதாவது 9 நிமிடங்களில் 6 குழந்தைகளை பெற்றுள்ளார். அதில் 4 ஆண் குழந்தைகள், 2 பெண் குழந்தைகள்.

எனினும் இந்த அதிசயமான பிரசவம் 470 கோடி பிரசவத்தில் ஒரு முறை நிகழும் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். தாயும் குழந்தைகளும் நலமுடன் இருக்கின்றனர் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிறந்த 6 குழந்தைகளும் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் மருத்துவரின் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என மருத்துவமனைதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikathir



ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கை விடயங்களை கையாளுகின்றமையை ஒட்டி யாழ் மாவட்ட சர்வமதப் பேரவை சார்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் அம்மையாருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் முழு விவரம் இது.

# ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கும் பொறுப்பு கூறும் கடப்பாடு உண்டு

போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றும், தமிழ் மக்களின் பண்பாட்டுத் தலைநகரம் என்று வர்ணிக் கப்படுவதுமாகிய யாழ் மாவட்டத்தின்சர்வமத பேரவைஆகியநாம் தங்களின் மேலான கவனத்தின் கீழ் பின்வரும் விடயங்களை கொண்டு வர விரும்பு கின்றோம்.–

1. நிலைமாறு கால நீதி என்ற வார்த்தையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூடாகவே நாம் அறிந்தோம். போருக்கு பின்னரான இலங்கைத் தீவிற்குஐ.நா.மனிதஉரிமைகள்பேரவை வழங்கிய தீர்வு அதுவாகும். அத்தீர்வை அமுல்படுத்துவதற்காக மனித உரிமைகள் பேரவை இது வரை இரண்டு தீர்மாணங்களை நிறைவேற்றி இருக்கின்றது. எனவே ஐ.நாவால் முன் மொழியப்பட்ட அத்தீர்வை அமுல்படுத்த வேண்டிய பொறுப்புபோரில்ஈடுபட்டதரப்புக்களுக்கு மட்டும் உரியதல்ல, போரில் ஏதோ ஒரு தரப்பைஆதரித்தஎல்லாருக்கும்உரியது. அதுமட்டுமல்ல. நிலைமாறு கால நீதியை முன்மொழிந்த ஐ.நாவிற்கும் உரியது. நிலைமாறு காலநீதி என்பது பிரயோகத்தில் பொறுப்புக்கூறல் என்றே விளங்கி வைத்துள்ளோம். எனவே அந் நீதியை அமுல்படுத்தும் விடயத்தில் ஐ.நா. வும் பொறுப்புக் கூற வேண்டும் எனநாம் எதிர்பார்க்கின்றோம்.

2. கடந்த நான்கு ஆண்டுகளாக ஐ.நா இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசத்தை வழங்கிவருகின்றது. இதுகால அவகாசமா அல்லது காலக் கெடுவா அல்லது கண்காணிக்கப்படுவதற்கான கால அட்டவணையா அல்லது காலம் தாழ்த்தும் உத்தியா? – இதில் இது எதுசரிஎன்பதனைஐநாஎங்களுக்கு தெளிவு படுத்தவேண்டும்.

3. இவ்வாறம் வெளிவந்த தங்களுடைய அறிக்கையின் பிரகாரம் அது வெறும் காலஅவகாசம் அல்ல மாறாக இலங்கைத் தீவை ஐ.நா. பொறுப்புக் கூறவைப்பதற்கான கால அட்டவணையே என்ற விளக்கமே எங்களுக்கு கிடைக்கின்றது. அதாவது இலங்கை அரசாங்கம் ஐ.நாவோடு இணக்கத்தோடு பங்கேற்று செயற்பட்டுவதாகத் தங்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் இது விடயத்தில் அரசாங்கத்தின் பொறுப்புக் கூறலையும் ஐ.நாவின் பொறுப்புக் கூறலையும் உறுதிப்படுத்தும் விதத்தில் ஐ.நா செயற்பட வேண்டும் எனஎதிர்பார்க்கின்றோம்.

4. இதன் பிராகாரம் ஐ.நா மனித உரிமை பேரவை அலுவலகம் ஒன்றை இனியும் தாமதிக்காமல் இலங்கைத் தீவில் அமைக்குமாறு அரசாங்கத்தின் மீதுஐ.நா.அழுத்தம்கொடுக்கவேண்டும்.

5. 30/1 தீர்மானத்தை அமுல்படுத்தும் விதத்தில் ஒரு கண்காணிப்பு பொறிமுறையை ஐ.நா. உருவாக்க வேண்டும்.

6. அக்கண்காணிப்புபொறிமுறையின் கீழ் இனிமேல் வழங்கப்படக்கூடிய எந்த ஒருகால அவகாசமும் கால அட்டவணையுடன் கூடியதாக இருக்கும் என்பதனை ஐ.நா. இம்முறை உறுதிப்படுத்தவேண்டும்.

7. மேற்கண்ட விடயங்களை கவனத்தில் கொள்ளாமல் நிறைவேற்றக் கூடிய எந்த ஒரு தீர்மானமும் நீதியை காலம் தாழ்த்தும் ஒரு நடவடிக்கைக்கு ஐ.நாவும் உதவுகின்றதா என்ற பாதிக்கப்பட்ட மக்களின் பயங்களை உறுதிப்படுத்துவதாக அமைந்துவிடும்.

8. எனவே கண்காணிப்பு பொறிமுறையின் கீழான கால அட்டவணையில் ஒன்றுதான் இலங்கை அரசாங்கத்தை ஓரளவுக்கேனும் பொறுப்புக் கூற வைக்கும், இல்லை என்றால் நிலைமாறு கால நீதி என்பது நீதியை ஒத்தி வைக்கும் ஒருதந்திரமே எனப் பாதிக்கப்பட்டமக்கள் முடிவெடுக்கக் கூடும்.

## இப்படி இடித்துரைக்கின்றது யாழ் மாவட்ட சர்வமதப் பேரவை

9. கடந்தநான்குஆண்டுகாலத்தை ஐ.நாவின் நோக்கு நிலையில் நிலைமாறு கால நீதிக்குரிய காலமாக எடுத்துக்கொண்டால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்கெல்லாம் நீதிமறுக்கப்பட்டது என்பதற்கு பின்வரும் உதாரணங்களை எடுத்துக் காட்ட விரும்புகின்றோம். –

i காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

ii. அரசியல் கைதிகளுக்கு நீதி கிடைக்கவில்லை

iii. காணிவிடுவிப்பு முழுமையாக்கச் செய்யப்படவில்லை.

iv. பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்து அமுலில் உள்ளது.

v. பாதுகாப்பிற்கான வரவு – செலவு திட்ட ஒதுக்கீடுஎல்லா அமைச்சுக்களை விட அதிகமாக உள்ளது. சுகாதாரம், கல்வி ஆகிய இரண்டுஅமைச்சுக்களுக்கும்ஒதுக்கப்பட்ட நிதிகளின் கூட்டுத் தொகையை விடவும் அதிகமான தொகை பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

vi. யுத்தத்தால் வாழ்விழந்தவர்கள், வாழ்வாதாரங்களை இழந்தவர்;களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.–

vii. அங்கவீனர்களுக்கு தேவை யான உதவிகள் கிடைக்கவில்லை.


viii. தமிழ் பகுதிகளில் தமிழர்கள் அல்லாதவர்களுக்கு அரசு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுகிறது.

ix. துறைசார்ந்த நிபுணர்களை பாதிக்கப்பட்டபகுதிகளுக்கு அனுப்புவதற்கு பதிலாக சிற்றூழியர்களே, அதுவும் வடக்கு கிழக்கிற்கு வெளியில் இருந்து நியமிக் கப்படுகின்றார்கள்;.

10. இவை சில உதாரணங்களே இவ்வாறு கூறத்தொடங்கினால் எமது அறிக்கையான உங்களுக்கு களைப் பூட்டும் விதத்தில் எமது துயரங்களை போலவே நீண்டதாக அமைந்துவிடும். எனவே விரிவுக்கஞ்சி அவற்றை தவிர்க்கின்றோம். அதேசமயம். ஐ.நா. முன்மொழிந்த நீதியை அமுல் படுத்த வேண்டிய பொறுப்பு ஐ.நாவிற்கும் உண்டு என்பதை அழுத்திக் கூற விரும்புகின்றோம்.

நீதி எனப்படுவது யாருக்கு? நீதி மன்றுக்கா அல்லது வழக்கறிஞருக்கா? அல்லது பாதிக்கப்பட்ட மக்களுக்கா? அது பாதிக்கப்பட்ட மக்களுக்குத்தான். எனவே பாதிக்கப்பட்ட மக்கள் ஐ.நாவின் நீதியின் மீது அவநம்பிக்கை கொள்வதை தடுக்கவேண்டிய பொறுப்பு ஐ.நாவிற்கு உண்டு என்பதனை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். பாதிக் கப்பட்ட மக்கள்நிலைமாறுநீதியின்மீதுநம்பிக்கை கொள்ளத்தக்க விதத்தில் இவ்வாண்டு ஐ.நா. தீர்மானம் அமைய வேண்டும் என்று பிராத்திக்கின்றோம்.

# பன்னிரு கை வேலனுக்கு உகந்த பங்குனி உத்தர திருநாள் இன்று!



பங்குனி உத்தரம் என்பது முருகனுக்குரிய சிறப்பு விரத தினமாகக் கொண்டாடப்படுகிறது. இது பங்குனி மாதத்தில் வரும் உத்தர நட்சத்திர தினமாகும். தமிழ் மாதங்களில் 12ஆம் மாதம் பங்குனி. நட்சத்திரங்களில் 12 ஆம் நட்சத்திரம் உத்தரம். எனவே பன்னிரு கை வேலவனுக்குச் சிறப்பான தினமாகக் கொண்டாடப்படுகிறது.

சிவனுக்கும் பார்வதிக்கும் சோமசுந்தரர் என்றும் மீனாட்சி என்றும் நாமம் கொடுத்து மணம் செய்வித்த நாளும் பங்குனி உத்தர நாளாகும். சிவனின் மோன நிலையைக் கலைத்த மன்மதனை எரித்ததால் கலங்கி நின்ற தேவர்களுக்கு ஆறுதல் வார்த்தையாக சிவன் தேவியை இத்தினத்தில் மணந்தார் என்பது ஐதீகம்.

இத்தினத்தில் சிவனுக்கும் பார்வதிக்கும் ஆடை அணிகளால் அழகுசெய்து மணவறையில் அமர்த்தி வாத்தியங்கள் முழங்க, வேதங்கள் ஓதி, ஹோமம் வளர்த்து, தோத்திரங்கள் கூறி, தாலி கட்டி, வாழ்த்துக்கள் கூறி, அலங்கரித்த பல்லக்கில் இருவரையும் ஊர்வலமாகக் கொண்டு சென்று பள்ளியறைக்கு அனுப்பி வைப்பார்கள்.

இத்தினத்தில் பார்வதியை, பரமேஸ்வரன் மணந்தார். ராமன், சீதையை கரம் பிடித்தார். மேலும் முருகன், தெய்வானையை கரம் பிடித்தார். திருவரங்கநாதர், ஸ்ரீ ஆண்டாள் முதலிய தெய்வ திருமணங்கள் பலவும் பங்குனி உத்திரத்தன்று தான் நடைபெற்றன. இதனால் பங்குனி உத்திர விரதம் திருமண விரதம் என்றும், கல்யாண விரதம் என்றும் போற்றப்படுகிறது.

இந்நாளில் சிவனையும், முருகனையும் திருமணக் கோலத்தில் வணங்கி வழிபட்டால், திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும் என நம்பப்படுகிறது.

அறுபடை வீடுகளில் மூன்றாம் படைவீடான திருவாவினன்குடியில் அமைந்து இருக்கும் பழனியில் பங்குனி மாதம் உத்தரம் நட்சத்திர திதியில் நடைபெறும் விழா பங்குனி உத்தரம் ஆகும்.

அனைத்து அறுபடைவீடுகளில் பங்குனி உத்தரம் வீழா நடைபெற்றாலும், பழனியில் நடை பெறும் பங்குனி உத்தரம் திருவிழாவும், தேரோட்டமும், சிறப்பு வாய்ந்தவையாகும்.








சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்காக தலா பத்தாயிரம் ரூபாய் காசோலைகளும், தூய்மையாக்கல் உபகரணங்களும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் வைத்து வழங்கப்பட்டுள்ளன. பச்சிலைப்பளி பிரதேச சபையின் ஆளுகையில் உள்ள 22 சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்காக தலைவர் சுப்பிரமணியம் சுரேனின் ஆலோசனைக்கமைவாக பிரதேச சபையின் உபதவிசாளர் கஜனினால் சனசமூக நிலைய நிர்வாகத்தினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் சபையின் செயலாளர் மற்றும் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், சபையினுடைய விடயம் சார்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# இலஞ்ச, ஊழல் குற்றங்களை மைத்திரியும் இழைத்துள்ளார்



## பாலித ரங்கே பண்டார குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 21

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இலஞ்ச – ஊழல் குற்றங்களை புரிந்துள்ளார். இதனை வெளிக்கொண்டுவந்த காரணத்தினாலேயே அரசியல் பழிவாங்களுக்கு நான் உள்ளாகினேன்.

– இவ்வாறு பரபரப்புத் தகவல் வெளியிட்டுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலஞ்ச – ஊழல் தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. ஆனால், இதனை இல்லாதொழிக்க தீர்க்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதா என்பது சந்தேகமே.

ஒக்ரோபர் 26ஆம் திகதி இலஙகை அரசியலில் நிகழ்ந்த சம்பவமும் இதற்கான உதாரணமாகவே காணப்படுகிறது.

மக்கள் ஆணையுடன் ஆட்சிபீடமேறிய ஒரு அரசு, சட்டவிரோதமாக, இன்னொரு தரப்பிடம் இலஞ்சமாக ஒப்படைக்கப்பட்டது.

இலஞ்சம் என்பது பணத்துடன் மட்டும் தொடர்புடையது அன்றி, பதவி, அதிகாரத்தைக் கொடுத்தும் இந்தக் குற்றத்தை மேற்கொள்ளலாம்.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்ட தலைவர்கள், இந்த குற்றத்தை வெளிக்கொண்டுவந்த நபர்களை அரசியல் பழிவாங்களுக்கு உட்படுத்தியுள்ளனர்.

அந்தவகையில்தான் நானும் தற்போது பாதிக்கப்பட்டுள்ளேன். இந்த சூழ்ச்சி தோற்கடிக்கப்பட்டு 3 மாதங்கள் கடந்துவிட்ட போதிலும், அமைச்சுப் பதவியொன்று எனக்கு வழங்கப்படவில்லை.

இதனையிட்டு நான் கவலையடையப் போவதில்லை. தற்கொலை செய்துக் கொள்ளப்போவதுமில்லை. இவற்றுக்கு முகம் கொடுக்க நாம் தயாராகிக் கொள்ள வேண்டும் – என்றார். (ஐ)

# விமானக் கொள்வனவுக்கு எதிர்ப்பு; அமைச்சரவையில் மைத்திரி சீற்றம்!

கொழும்பு, மார்ச் 21

இலங்கை விமானப்படைக்கு விமானம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்குப் பாதுகாப்பு அமைச்சினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு, நிதி அமைச்சர் மங்கள சமரவீர எதிர்ப்பு வெளியிட்டதால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

நேற்று முன் தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், இலங்கை விமானப்படைக்கு விமானம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கு நிதி அமைச்சர் மங்கள சமரவீர எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார்.

அப்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த நான்கு ஆண்டுகளில் விமானப்படை மற்றும் கடற்படைக்கான விமானங்கள் மற்றும் கப்பல்களைக் கொள்வனவு செய்ய முயன்றபோதெல்லாம் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதால், அவற்றைக் கொள்வனவு செய்ய முடியவில்லை என்று தெரிவித்தார்.

அத்துடன் விமானங்கள், கப்பல்களின் வெற்றிடத்தை மீள் நிரப்புவதற்கான பரிந்துரைகளைச் செய்வதற்கு குழுவொன்றை அமைக்குமாறும் ஜனாதிபதி கேட்டுள்ளார்.



இதற்கு நிதி அமைச்சர் மங்கள சமரவீர,விமானப்படைக்குவாங்கவுள்ள விமானம் 40 ஆண்டுகள் பழைமையானது என்பதால் தான் நிதி அமைச்சு எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறியுள்ளார். (ஐ)

# மின் விநியோகம் சீரானது

## மின் சக்தி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின், திருத்தப்பட்ட இரண்டாவது மின்பிறப்பாக்கி, தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாக என மின்சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் நேற்றுப் புதன்கிழமை முதல் மின்சாரம் தடையின்றி விநியோகிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின், இரண்டாவது மின்பிறப்பாக்கி, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கடந்த திங்களன்று செயலிழந்தது. இதனால் வடக்கு உட்பட நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்தவருக்கு 2 மாத சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 21

ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றவாளிக்கு 2 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் தீர்ப்பளித்தார்.

அத்துடன், குற்றவாளி 10 ஆயிரம் ரூபா தண்டப் பணத்தை செலுத்தவேண்டு என்று உத்தரவிட்ட நீதிமன்று, அதனைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்றும் சுட்டிக்காட்டியது.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் 50 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கடந்த வாரம் கைது செய்யப்பட்டார். அவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த நிலையில் அவரது வழக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நீதிமன்றில் மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனையடுத்து நீதிமன்று தண்டனைத் தீர்ப்பை வழங்கியது.

# நெடுந்தீவில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம்

## அமைச்சர் ரவி அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 21

நெடுந்தீவில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு அந்தப் பிரதேச மக்களின் மின் தேவை நிறைவு செய்யப்படும் என்று மின்வலு மற்றும் சக்தி வளத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நெடுந்தீவுக்கு அண்மையில் மேற்பார்வைப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள நிலமைகளை ஆராய்ந்த பின்னர் இந்த முடிவை அவர் அறிவித்துள்ளார்.

நெடுந்தீவில் சுமார் 4 ஆயிரத்து 500 பேர் வசிக்கின்ளனர். அவர்களுக்கு மின் தேவையை நிறைவேற்றவேண்டும். அதற்கு நெடுந்தீவில் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதில் முதற்கட்டமாக அங்கு காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான கேள்வி கோரல் விரைவில் அறிவிக்கப்படும் என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார். (ஐ)

# குற்றங்களை மூடி மறைப்பதால் நல்லிணக்கத்தை எட்ட முடியாது!

## சார்ல்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

போர்க்குற்றங்கள் பற்றிய உண்மைகள் கண்டறியப்பட்டு வெளிப்படுத்தப்படும் வரையில் மறப்போம், மன்னிப்போம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற டிஜிட்டல் உட்கட்டமைப்புவசதிகள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சு, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, பொது தொழில் முயற்சி ,கண்டிய மரபுரிமை மற்றும் கண்டிய அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் மீதான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

குற்றங்களை மூடி மறைந்து நல்லிணக்கத்தை எட்ட முடியாது.



சர்வதேச தலையீட்டில் தீர்வுகள் வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

திரு.ஷாம்சன் அவர்களின் மூன்றுமாத
SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

அரச தனியார் ஊழியர்கள், ஆசிரியர்கள், இளைஞர் யுவதிகள், உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

சனி ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் ; 23.03.2019
01 : காலை 08 - 10 02 : மாலை 03 - 05

23.03.2019 வரை இணைவோருக்கு மூன்று மாத பயிற்சிக் கட்டணம் ரூபா [illegible] 3000 மட்டுமே.

செவ்வாய் வியாழன் பிரிவுகள் 21.03.2019
1.காலை 8.30 2.மாலை 03-05

SAAMSON
403. வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ் நகர்.
021 222 4282
077 621 4567



# அசத்தல் வெற்றியை பதிவு செய்தது இளவாலை சென்.லூட்ஸ் அணி

வலிகாமம் லீக்கின் அனுமதியோடு தெல்லிப் பளை நாமகள் வி.க நடாத்தும் அணிக்கு 07 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் இளவாலை சென்.லூட்ஸ் அணியை எதிர்த்து சமரபாகு நீயூட்டன் அணி மோதியது.

இவ் ஆட்டத்தில் 03 – 0 என்ற கோல் கணக்கில் லூட்ஸ் அணி வெற்றி பெற்றது. லூட்ஸ் அணி சார் பாக தமிழ்ச்செல்வன், அஜித், ரமேஷ் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்று கொடுத்தனர்.



# இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது யங்கம்பன்ஸ் அணி

கம்பர்மலை கலாவாணி சன சமூக நிலைய வைர விழா முன்னிட்டு நடத்தப்படும் 07நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் கரணவாய் கொலின்ஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம் பன்ஸ் அணி மோதியது..

ஆட்ட நேர முடிவில் 2 – 1 என்ற கோல் கணக் கில் யங்கம்பன்ஸ் அணி வெற்றி பெற்று இறுதி போட் டிக்கு தகுதி பெற்றது.

யங்கம்பன்ஸ் அணி சார்பாக ரதன், தர்சன் ஆகியோர் தலா ஒரு கோலைப் பெற்று கொடுத்தனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக யங்கம்பன்ஸ் அணி வீரர் தர்சன் தெரிவு செய்யப்பட்டார்.

# இலங்கை ஒருநாள் அணிக்கு இவர் தான் புதிய தலைவரா?

இலங்கை ஒருநாள் கிரிக்கெட் அணிக்கு திமுத் கருணரத்னேவை தலைவனாக நியமிப்பது குறித்து இலங்கை கிரிக்கெட் வாரியம் ஆலோசித்து வரு வதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி ஒருநாள் போட்டி களில் தொடர்ந்து மோசமாக விளையாடி வருகிறது.

இந்தாண்டு விளையாடிய 8 ஒரு நாள் போட்டி களிலும் அந்த அணிக்கு தோல்வியே மிஞ்சியது.

பரிசோதனை முயற்சியாக கப்டன் பதவி மலிங் கவிடம் வழங்கப்பட்ட நிலையில் அவரது தலைமை குறித்து அணிநிர்வாகம் திருப்தி அடையவில்லை.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நெருங்கி வரும் வேளையில் தலைவனை மாற்றுவது குறித்து இலங்கை கிரிக்கெட் சபை யோசித்து வருகிறது. சமீபத்தில் டெஸ்ட் தொடருக்கு திமுத் கருணாரத்ன கப்டனாக நியமிக்கப்பட்டார்.

அவரது தலைமையில் இலங்கை அணி தென்னாபிரிக்க மண்ணில் டெஸ்ட் தொடரைக் கைப்



பற்றி வரலாறு படைத்தது. அங்கு டெஸ்ட் தொடரை வசப்படுத்திய முதல் ஆசிய அணி என்ற சிறப்பையும் பெற்றது.

இதனால் கருணாரத்னவுக்கு தலைவர் பதவியை கொடுக்கலாமா என்பது குறித்து அணி நிர்வாகம் சிந்திக்க தொடங்கியுள்ளது.

டெஸ்ட் வீரர் என்று முத்திரை குத்தப்பட்ட கரு ணாரத்ன 2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்கு பிறகு ஒரு நாள் கிரிக்கெட்டில் இருந்து ஓரங்கட்டப்பட்டார்.

30 வயதான கருணாரத்னே இதுவரை 17 ஒரு நாள் போட்டிகளில் ஆடி 190 ரன்கள் மட்டுமே எடுத் துள்ளார்.


இது குறித்து அவர் கூறுகையில், உலக கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு நான் தான் தலைவர் என்று எது வும் உறுதி செய்யப்படவில்லை.

ஆனால் ஒரு நாள் போட்டி அணிக்கு தலைவனாக நியமிக்கப்பட வாய்ப்பு இருப்பதாக என்னிடம் தேர்வா ளர்கள் கூறியிருக்கிறார்கள். இதனால் கழகம் போன்ற தொழில்முறை போட்டியை தவிர்க்கும்படி அறிவுறுத் தியுள்ளனர்.

உலகக் கிண்ண அணிக்கு தேர்வு செய்யப்பட்டால் அதற்கு தயாராவதற்கு பயிற்சி முகாம்களில் பங்கேற்க வேண்டி இருக்கும். அவ்வாறு நிகழ்ந்தால் இங்கிலாந் தின் கவுண்டி அணியான ஹாம்ஸைர் அணிக்கு நான் விளையாட முடியாமல் போகலாம் – எனக் கூறியுள்ளார்.

கருணாரத்னவை தவிர, மலிங்க, மத்யூஸ், சண்டிமால் ஆகியோரும் கப்டன் பதவிக்கான போட்டியில் உள்ளனர்.

# பெண்கள் உலகக்கிண்ண உதைபந்துத் தொடரை கொரியாக்கள் விருப்பம்!




எதிர்வரும் 2023ஆம் ஆண்டுக்கா[illegible] பெண் கள் உலகக்கிண்ண கால்பந்து தொடரை நடத்த, வடகொரியா மற்றும் தென்கொரியா உதைபந்து சம்மேளனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன.

கடந்த காலங்களில் போர் பதற்றம் நிறைந்த நாடுகளாக திகழ்ந்த இந் இரு நாடுகளும், தற்போது கரம் கோர்த்து சமானதானமாகப் பல திட்டங்களை முன்னெடுத்துவருகின்ற நிலையில், அதன் ஓர் அங்கமாக விளையாட்டுத் துறையிலும் இரு நாடுகளும் தற்போது கால்பதிக்கவுள்ளன.

ஏற்கனவே தென்கொரியா 2018ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் தொடரை நடத்தியிருந்தது. ஆகவே அந்த அனுபவம் பெண்கள் உலகக் கிண்ண உதைபந்து தொடரை நடத்துவதற்கு பெரும் உதவியாக இருக்கும் என நம்பப்படுகின்றது.

பிரிந்த கொரிய தீபகற்பத்தில் அரசியல் பதற் றங்களை எளிதாக்கும் முயற்சியில், வடக்கு மற்றும் தெற்கில் இருந்து ஓர் ஒருங்கிணைந்த குழு கடந்த ஆண்டு பியோங்சாங்கில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் போட்டியிட்டது.

மேலும், ஜகார்த்தா மற்றும் பாலேம்பங்கில் உள்ள ஆசிய விளையாட்டுகளில் ஒரு பொதுக் கொடியின் கீழ் கூட்டு அணிகளாகவும் இரு அணி களும் போட்டியிட்டன.

ஏற்கனவே எதிர்வரும் 2023ஆம் ஆண்டுக் கான பெண்கள் உலகக்கிண்ண கால்பந்து தொடரை நடத்துவதற்கு ஆர்ஜென்ரீனா, ஆஸ்ரேலியா, பொலிவியா, பிரேசில், கொலம்பியா, ஜப்பான், நியூஸிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா நாடுகள் விண்ணப்பித்துள்ளன. தற்போது அந்த பட்டியலில் இவ் இரு நாடுகளும் இணைந்துள்ளன.

இத்தொடரை நடத்துவதற்கான உரிமத்தை விண்ணப்பிக்கும் இறுதித் தினம் ஏப்ரல் 16ஆம் திகதி யுடன் நிறைவுக்கு வருகின்றது. இதற்கான முடிவு அடுத்த வருடம் மார்ச் மாதம் அறிவிக்கப்படவுள் ளது.

உலகில் அதிக வரவேற்பை பெரும் விளை யாட்டுத் திருவிழாவான, உலகக்கிண்ண உதைபந் துத் தொடர் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்.

அதேபோல பெண்களுக்கான உலகக்கிண்ண உதைபந்து தொடரும் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.

இதற்கமைய, 8ஆவது பெண்களுக்கான உலகக் கிண்ண உதைபந்து தொடர், இம்முறை பிரான்ஸில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகும் இத்தொடர், எதிர்வரும் ஜூலை மாதம் 7ஆம் திகதி வரை ரசி கர்களை மகிழ்விக்கவுள்ளது.

24 அணிகள் பங்கேற்கும் இத்தொடரில், லீக், அரையிறுதி, இறுதி என மொத்தம் 54 போட்டிகள் நடைபெற உள்ளன. இந்த போட்டிகள் பாரிஸ் உட் பட 9 நகரங்களில் நடைபெற வுள்ளன.

1991ஆம் ஆண்டு ஆரம் பமான உலகக்கிண்ண தொட ரில், இதுவரை 7 தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் அதி கபட்சமாக மூன்று முறை அமெ ரிக்கா சம்பியன் பட்டம் வென் றுள்ளது. ஜேர்மனி இரண்டு முறையும், நோர்வே ஒரு முறையும் சம்பியன் பட்டம் வென்றுள்ளன.

போட்டிப் பரீட்சைக்கான மாலை நேர வகுப்புக்கள்
ஆரம்பம் :
வியாழன் (21/3)
பி.ப 5.00 - 7.00
பொது உளச்சார்பு
நீதிமன்ற முகாமைத் துவ உதவியாளர், பதிவாளர் மற்றும் SLAS, SLFAS உட்பட அனைத்து பரீட்சைக்கும்
செவ்வாய், புதன், வியாழன்
பி.ப 5.00 - 7.00
0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரிவீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

## குற்றமிழைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் எச்சரித்துள்ளார்.

## கலப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் கிளை அலுவலகமொன்றை இலங்கையில் திறக்குமாறு முன்வைக்கப்பட்ட யோசனையையும் அவர் நிராகரித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40ஆவது கூட்டத் தொடரில் நேற்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின், இலங்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்காமை குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கடும் அதிருப்தியை வெளிப் படுத்தியுள்ளார்.

கலப்பு நீதிமன்ற பொறிமுறை உட்பட சில பரிந்துரைகளையும் முன்வைத்தார்.

அந்த அறிக்கைக்கு இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன பதிலளித்து உரையாற்றினார்.

அவர் தனது உரையில் –

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இழப்பீட்டுப் பணியகம் நிறுவப்பட்டுள்ளது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்கான நடவடிக்கை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. அமைச்சரவையில் அது பரிசீலிக்கப்படுகின்றது.

அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகளைத் துரிதமாக விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக சர்வதேச தரத்திலான சட்டத்தை அமுல்படுத்த பொறிமுறை வகுக்கப்பட்டு வருகின்றது.

சர்வதேச நீதிபதிகளை ஏற்க இலங்கை அரசமைப்பில் இடமில்லை. ஐ.நாவின் கோரிக்கையை ஏற்பதாயின் அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும். மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவேண்டும் என்பதுடன், சர்வஜன வாக்கெடுப்புக்கும் செல்லவேண்டும் – என்றார். (ஐ)

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் எனக் கனடா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40ஆவது கூட்டத் தொடரின் நேற்றைய அமர்வில் இலங்கை தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

ஐ.நா. பிரேரணையை நடைமுறைப்படுத்தாமை, நல்லிணக்கப் பொறிமுறை தாமதிக்கப்படுகின்றமை, நிலைமாறுகால நீதி பொறிமுறையைச் செயற்படுத்தாமை தொடர்பாக ஐ.நா. ஆணையாளர் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில் இதுதொடர்பாக கருத்து வெளியிடும்போதே கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி இவ்வாறு வலியுறுத்தினார்.

வழங்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் அந்தப் பிரேரணை நிறைவேற்றப்படவேண்டியது அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

கடந்த கால வன்முறைகளுடன் தொடர்புடையவர்களை தண்டனையிலிருந்து விடுவிப்பதானது சிறுபான்மையின மக்களுக்கு எதிராக எதிர்காலத்தில் வன்முறைகள் இடம்பெறும் சாத்தியப்பாடுகளை அதிகரிக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றைய அமர்வில் இலங்கை தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போர்க்குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களை உயர் பதவிகளில் நியமிப்பது பொருத்தமற்றது. குறிப்பாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை படைகளின் பிரதானியாக நியமித்திருப்பது கவலைக்குரியது.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை – வினைத்திறனான விசாரணை – அவசியமாகும்.

இலங்கையில் சித்திரவதைகள் தொடர்கின்றன. ஐ.நா. சித்திரவதைகளுக்கு எதிரான பிரகடனத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் – என்றார். (ஐ)

## ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிக கரிசனை கொண்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் அதனை ஏற்றுக்கொள்ள முடியாதென அது சுட்டிக்காட்டியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40ஆவது கூட்டத் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று நடந்த அமர்வில் பங்கேற்று உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார்.

நல்லிணக்கம் தொடர்பாக இலங்கை முன்னெடுத்துள்ள செயற்பாடுகளைப் பாராட்டிய ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி, பாதிக்கப்பட்டோர் தொடர்பாக நிலையான மற்றும் துரித செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்வது அவசியமென வலியுறுத்தினார்.

பாதிக்கப்பட்டோருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை தாமதமின்றிச் செயற்படுத்த வேண்டுமெனவும், இவை குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றப்படுவது அவசியமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயங்கள் செயற்படுத்தப்படும் பட்சத்தில் மாத்திரமே சர்வதேச நாடுகள் இலங்கையுடன் இணைந்து செயற்படுமெனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

## மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகப்பூர்வ அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் சமர்ப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து உறுப்பு நாடுகள், அந்த அறிக்கை தொடர்பாக கருத்துக்களைத் தெரிவித்தன. இதன்போதே டென்மார்க் பிரதிநிதி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

30/1 பிரேரணையை நிறைவேற்றுவதற்கான கால அட்டவணை ஒன்றைத் தயாரித்து முன்வைப்பது அவசியமானது.

அத்துடன், யுத்த காலத்தில் பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொண்டவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் பாலியல் அத்துமீறல்கள் குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

## வாட்கைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறித்து சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த சாரதி யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அத்துடன், படுகாயமடைந்த சாரதியின் குருதியைத் தொட்டு பொட்டு வைத்த அந்தக் கும்பல், அவரது காரின் கமராவையும் அபகரித்துத் தப்பித்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## 6 தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்ற கோரிக்கை உள்ளிட்ட மூன்று விடயங்களை உள்ளடங்கி, ஆறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களால், கைச்சாத்திடப்பட்ட மகஜர் நேற்று முன்தினம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் சமர்ப்பிக்கப்பட்டது.

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம், தமிழ் மக்கள் கூட்டணி ஆகியவற்றின் தலைவர்கள் இந்த மனுவில் கைச்சாத்திட்டனர்.

நேற்று முன் தினம் மாலை ஜெனீவா நேரப்படி, பிற்பகல் 3 மணிக்கு இந்த மனு கையளிக்கப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கைக்கான பிரதிநிதி திருமதி லவ்வியா கமிலோவிடம் இந்த மனு கையளிக்கப்பட்டது. வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வலிவடக்கு பிரதேச சபை உறுப்பினர் ச.சஜீவன், நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகளான மணிவண்ணன், மாணிக்கவாசகம் மற்றும் ஈழத்தமிழர் மக்கள் அவையின் பிரதிநிதி ஆகியோர் இந்த மனுவைக் கையளித்தனர்.

இலங்கை விவகாரத்தை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லவேண்டும், சர்வதேச தீர்ப்பாயம் ஒன்று நியமிக்கப்பட வேண்டும், 30/1 மற்றும் 34/1 ஆகிய தீர்மானங்கள் அமுல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க ஐ.நா. கண்காணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவதுடன் அவர் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்கவேண்டும் என்று அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது. (ஐ)

## போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீதான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கவேண்டும்.

–இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

களனியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யுத்தகாலத்தில் இடம்பெற்ற குற்றங்கள் நிரூபிக்கப்படுமாயின் எந்தவொரு நீதிமன்றத்துக்கும் வந்து பதிலளிக்கத் தயார். இந்தப் பிரச்சினைகளுக்கு உள்நாட்டு விசாரணைகளினூடாகவே தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். யுத்தச் செயற்பாடுகளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினர் தமது சுய அரசியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்திக்கொண்டமையாலேயே இன்று இலங்கை சர்வதேச விசாரணைகளை அணுகவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இலங்கையில் யுத்தகாலத்தில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பாகச் சர்வதேசத்தின் விசாரணைகளில் இருந்து வெளியேற வேண்டுமானால் குற்றவாளிகள் மீதான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் நேற்று நண்பகல் இடம்பெற்றது.

சம்பவத்தில் யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த குணசிங்கம் ரஜீவ்குமார் என்பவரே படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாண நகரில் கார் சாரதியாக இருக்கும் அவர் பயணிகளை ஏற்றிக் கொண்டு வேம்படி வீதியால் நேற்று நண்பகல் பயணித்துக் கொண்டிருந்தபோது, கறுப்பு நிறக் கார் ஒன்று அவரது காரை இடைமறித்துள்ளது.

அதே நேரத்தில் 5 மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த கும்பல் ஒன்று கார் சாரதியை வெட்டி காயப்படுத்திவிட்டுத் தப்பி சென்றுள்ளது.

படுகாயமடைந்த சாரதியை அப்பகுதியில் நின்றவர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

தனிப்பட்ட முரண்பாடு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

அத்துடன், தாக்குதலாளிகள் கார் சாரதிக்கு அறிமுகமானவர்கள் எனவும் அவர்கள் யாழ்ப்பாணம் பிட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ–07)

## 13 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளவிடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40ஆவது கூட்டத் தொடரின் நேற்றைய அமர்வில் இலங்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையை தொடர்ந்து உரையாற்றியபோதே இந்தியாவின் பிரதிநிதி இதனை வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை தமது நட்புநாடு என்றவகையில் சகல விடயங்களிலும் இந்தியா துணை நிற்கும். குறிப்பாக தேசிய ஒற்றுமை, மனித உரிமை போன்ற விடயங்களில் அதிக கரிசனை கொண்டுள்ளோம். அத்தோடு, இலங்கையின் தமிழ்ச் சமூகம் தொடர்பாக கரிசனையுடன் செயற்பட்டுவருகிறோம்.

மீள்குடியேற்றம், நல்லிணக்கம் போன்ற விடயங்கள் தொடர்பாக நிலையான திட்டங்களை நடைமுறைப்படுத்துவது அவசியம் – என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகிழ்வித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அமைச்சர் நவீன் திஸாநாயக்க.

பௌர்ணமி தினத்தை முன்னிட்டு கொழும்பு – நாராஹேன்பிட்டிய பகுதியிலுள்ள விகாரையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர் நவீன் திஸாநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் நவீன் –

எனது உரையை குறுகிய நேரத்துக்குள் நிறைவு செய்ய வேண்டியுள்ளது. எமது எதிர்கால ஜனாதிபதி வேட்பாளருக்கு (கோட்டாபய) மேலும் பல நிகழ்வுகளில் கலந்துகொள்ள வேண்டியிருக்கும் எனக் குறிப்பிடுகையில், அவையிலிருந்து அனைவரும் சிரித்துவிட்டனர்.

அத்துடன், நாட்டில் சிங்கள், பௌத்த மக்களின் வாக்குகளால் தான் ஆட்சிமாற்றம் ஏற்படுகின்றது. தகைமையுடையவருக்கு அதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் (கோட்டாவுக்கு) அதற்காக நாம் பிரார்த்திப்போம் என்றும் நவீன் குறிப்பிட்டார்.

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட கோட்டாபய ராஜபக்ஷ –

என்னை ஜனாதிபதி வேட்பாளராக விளித்த நண்பன் நவீன் திஸாநாயக்கவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தந்தையால் (காமினி திஸாநாயக்க) செய்யமுடியாமல் போனவற்றை நவீன் செய்யவேண்டும் என நானும் பிரார்த்திக்கின்றேன். அதேபோல் நவீனின் மாமா (கரு ஜயசூரிய) ஜனாதிபதி வேட்பாளராவார் என நாமும் எதிர்பார்க்கின்றோம். – எனச் சிரித்தபடியே கூறினார். (ஐ)

## மைத்திரிபாலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜுன் மஹேந்திரனை திருப்பி அனுப்ப ஆக்கபூர்வ நடவடிக்கைகளை எடுக்கவில்லையென்ற ஜனாதிபதி மைத்திரியின் குற்றச்சாட்டை சிங்கப்பூர் நிராகரித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர்–

இது தொடர்பில் கடந்த ஜனவரியில் இருந்து விசாரணைகள் இலங்கையுடன் இணைந்து நடத்தப்படுகின்றன. ஆனால் இது சம்பந்தமான உரிய ஆவணங்கள் எதுவும் இலங்கையிடம் இருந்து இதுவரை கிடைக்கவில்லையெனத் தெரிவித்துள்ளார்.

உரிய ஆவணங்கள் ஆதாரங்கள் கிடைத்தால் எங்கள் நாட்டின் சட்டப்படி நடவடிக்கைகளை எடுப்போம். அப்படியில்லாமல் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதில் அர்த்தமில்லை என்றும் அந்த பேச்சாளர் குறிப்பிட்டார். (ஐ)

## பொறுப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலச் சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதில் இலங்கை மந்தகதியில் செயற்பட்டு வருகின்றமை வேதனையளிக்கின்றது. எனவே, வகை கூறும் செயல்முறை துரிதப்படுத்தப்பட வேண்டும்.

குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறப்படும் பாதுகாப்பு படையினருக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்துவதில் தடங்கல் ஏற்படுகின்றது. அரசியல் ரீதியிலான தலையீடுகளும் இடம்பெறுகின்றன.

எனவே, உள்ளக நீதிக்கட்டமைப்பின்கீழ் நீதி நிவாரணம் கிடைக்குமா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. சர்வதேச நீதிபதிகளையும் உள்வாங்கும் வகையில் கலப்புப் பொறிமுறை உருவாக்கப்படவேண்டும். இந்தக் கோரிக்கையை இலங்கை நிராகரிக்கின்றமை கவலையளிக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க, தேசிய காரியாலயம் ஒன்று அமைக்கப்படவேண்டும். பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்புகளையும் வழங்கத் தயார். – என்றார்.

அதேவேளை, மரண தண்டனையை மீண்டும் நடைமுறைப் படுத்துவதற்கு ஜனாதிபதி தீவிர முயற்சி எடுத்துவரும் நிலையில், இது குறித்து ஐ.நா. ஆணையாளர் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார். இலங்கையில் தற்போது மரண தண்டனை அமுலில் இல்லை. அது அவ்வாறே நீடிக்க வேண்டும். – என்று குறிப்பிட்டார்.

# போரில் பாதிப்புற்ற தரப்புக்கு விரைவில் இழப்பீடு அவசியம்!

## ஜெனீவாவில் இலங்கையிடம் வலியுறுத்தியது பாகிஸ்தான்

ஜெனீவா, மார்ச் 21

போரினால் பாதிக்கப்பட்ட தரப்புக்கு இழப்பீடு வழங்குவது குறித்து இலங்கை அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40ஆவது கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் இலங்கை தொடர்பாக நேற்றுத் தமது உத்தியோகப்பூர்வ அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்சலெட் சமர்ப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து உறுப்பு நாடுகள், அந்த அறிக்கை தொடர்பாக கருத்துக்களை முன்வைத்தன.

இதன்போதே பாகிஸ்தான் பிரதிநிதி மேற்கண்டவாறு கூறினார்.

போருக்குப் பின்னர் இலங்கை பல காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்.

போருக்குப் பின்னர் வடக்கு – கிழக்கில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருந்த பொதுமக்களின் காணிகள் விடுக்கப்பட்டுள்ளமையை பாகிஸ்தான் பிரதிநிதி வரவேற்றார்.

அத்துடன், தீர்வுகாணப்படாத பல பிரச்சினைகள் உள்ளன எனவும், அவை குறித்து ஆராய்ந்து தீர்வு பெற்றுக் கொடுப்பது அவசியமானது எனவும் அவர் வலியுறுத்தினார்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இலங்கை முன்னெடுத்துவரும் செயற்பாடுகளுக்கும் அவர் பாராட்டு தெரிவித்தார். (ஐ)

# வடமாகாண ஆளுநரை ஜெனீவாவில் சந்தித்த அருட்தந்தை இம்மானுவேல்



ஜெனீவா, மார்ச் 21

வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனுக்கும் உலகத் தமிழர் பேரவைத் தலைவர் அருட்தந்தை இம்மானுவேலுக்கும் இடையில் திடீர் சந்திப்பொன்று ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தினிடையே இடம்பெற்றது.

ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான விவாதம் நேற்று இடம்பெற்றது.

இந்நிலையில், இந்த அமர்வு ஆரம்பமாவதற்கு முன்பு அருட்தந்தைக்கும் ஆளுநருக்கும் இடையில் இந்தத் திடீர் சந்திப்பு இடம்பெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சார்பில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் உள்ளிட்ட குழுவினர் ஜெனீவா சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கிழக்கில் விக்கி மக்கள் சந்திப்பு



மட்டக்களப்பு, மார்ச் 21

மட்டக்களப்புக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினர் நேற்று செங்கலடியில் மக்கள் சந்திப்புக்களில் ஈடுபட்டனர்.

தளவாய் பிரதேச இளைஞர்களின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை இடம்பெற்ற சந்திப்பில் பிரதேச மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் செயற்பாடுகள் பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டமையுடன், பிரதேசத்தின் நிலைமைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் உபதலைவரும், மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினருமான சோமசுந்தரம், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் வசந்தராஜா, கட்சியின் ஊடகச்செயலாளர் க. அருந்தவபாலன் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# காணாமல்போன மாணவன் குகைக்குள் சடலமாக மீட்பு!

கொழும்பு, மார்ச் 21

ஐந்து நாள்களாகக் காணாமல்போயிருந்த பாடசாலை மாணவன், அவரது வீட்டுக்கு மேலுள்ள கற்குகையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டிய, மாபகந்த பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேற்றை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்த இந்த மாணவனைக் கடந்த ஐந்து தினங்களாகக் காணவில்லை என நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் பிரதேசவாசிகளின் ஒத்துழைப்புடன் பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதே அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் நாவலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# 10 கிலோ கேரளக் கஞ்சாவுடன் யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், மார்ச் 21

அரியாலை, பூம்புகார் பகுதியில் 9 கிலோ கேரளக்கஞ்சா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கிளிநொச்சியைச் சேர்ந்த நபர் ஒருவரை நேற்று அதிகாலை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.,

யாழ்ப்பாண மாவட்ட போதைப் பொருள்தடுப்புப்பிரிவினருக்குக்கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அரியாலைப் பகுதியில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிளைச் சோதனை செய்தனர். இதன்போது 9 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# பட்ஜெட்டை சு.க. எதிர்க்கமுடியாது!

## கூறுகிறார் சியம்பலாப்பிட்டிய

கொழும்பு, மார்ச் 21

வரவு–செலவுத் திட்டத்தில் ஜனாதிபதிக்கான பல நிதி ஒதுக்கீடுகள் இருப்பதால், கட்சி என்ற வகையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதற்குக் கடுமையான எதிர்ப்பை முன்வைக்கமுடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

வரவு–செலவுத்திட்டத்தை விமர்சிக்க உரிமை இருக்கின்றது. வரவு–செலவுத் திட்டம் சிறந்தது என்று கூறினால், நான் ஆதரித்து வாக்களிக்க வேண்டுமல்லவா,

கட்சி என்ற முறையில் நாங்கள் பல விதமான முடிவுகளை எடுக்க நேரிடும். வரவு–செலவுத் திட்டத்தில் ஜனாதிபதிக்கான பல நிதி ஒதுக்கீடுகள் உள்ளன. இதனால், வரவு–செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் கலந்துக்கொள்ளாது தவிர்ப்பதே எங்களால் செய்யக் கூடியது.

எதிர்காலவரவு–செலவுத்திட்டத்தின்போது இப்படியான நிலைமை ஏற்படும் என நினைக்கவில்லை. மனச் சாட்சிக்கு இணங்கத் தீர்மானம் எடுக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு நேரிடும்.

ஆனால், இம்முறை ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடுகள் இருப்பதால், எப்படி கடுமையாக எதிர்ப்பது என்ற நிலைமை கட்சிக்கு ஏற்பட்டது. இதனால், எதிர்த்து வாக்களிப்பதற்குப் பதிலாக வாக்கெடுப்பில் கலந்துக்கொள்ளாது தவிரப்பது என கட்சி என்ற வகையில் தீர்த்தோம்–என்றார். (ஐ)

# சபாநாயகருக்கு கௌரவப்பட்டம்



கொழும்பு, மார்ச் 21

சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு 'விஷ்வ கீர்த்தி ஸ்ரீலங்கா ஜனரஞ்சன' என்ற கௌரவப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

மல்வத்து மாநாயக்கர் தலைமையிலான சங்க சபை இந்த கௌரவப் பட்டத்தை வழங்கியது.

கரு ஜயசூரிய செய்த சமய மற்றும் சமூக சேவைகளைப் பாராட்டி இந்த கௌரவப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

கௌரவப்பட்டத்தை வழங்கும் நிகழ்ச்சி மல்வத்து மஹா விகாரையில் நேற்று முன் தினம் நடைபெற்றது. (ஐ)

காணி விற்பனை

உரும்பிராய் வடக்கு, சுன்னாகம் பவர் ஸ்ரேசன் றோட்டில் 22 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு இல - 0772986612

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 21.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.